
# கலைச்செல்வி
KALAICHELVI




மார்கழி 1962 ✻ பாலன் வெளியீடு

உழைப்பவருக்கு உற்சாகம்
புகைப்பவருக்கு ஆனந்தம்



ராஜா பீடி ஸ்பெஷல்

# ராஜா பீடி கம்பெனி

கொழும்பு 14 போன் 2739

# 1963ம் வருட

# விவேகானந்தா

## திருக்குறட் கலண்டர் - டயறிகள்

பிரம்மஸ்ரீ, இ. சி. இரகுநாதையர் அவர்களின்
பஞ்சாங்கக் குறிப்புகளுடன் கூடியவை.

**வியாபார அன்பர்கள் பெயர் விலாசம்**
**அச்சிட்டு இனும் கொடுக்கச் சிறந்தவை.**

## புதிய அழகான படங்களுடன்

5 மாதிரிகளில் தயாராகியுள்ளன.

தயாரிப்பாளர்கள்:

**விவேகானந்த அச்சகம் - புத்தகசாலை**

விவேகானந்தாக் கட்டிடம்.

**யாழ்ப்பாணம்.**

தந்தி: "பிறின்ரேஸ்" போன்: 517

கிளை: 230, ஆதிருப்பள்ளித்தெரு, கொழும்பு.

தந்தி: "விவேபிறஸ்" போன்: 79620

Dial : 585 Cables : MANSOORA.

அழகுக்கு அழகு செய்யும்

# தங்க வைர, நகைகளுக்கு,

விஜயம் செய்யுங்கள்.

அணிவோரை மகிழ்விக்கும்

அற்புத டிசைன்களின்



உற்பத்தியாளர்கள்

# கே. என். எம். மீரான் சாஹிப்

"தங்கப்பவுண் நகை மாளிகை"

கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

# கலைச்செல்வி

தேமதுரத் தமிழோசை உலகமெலாம்
பரவும் வகை செய்தல் வேண்டும்—பாரதியார்

| கலை : 4 | மார்கழி : 1962 | காட்சி : 12 |
|---|---|---|


## பொருளடக்கம்.


1. எங்கள் கலைச்செல்வி
2. ஜெய்ஹிந்த்.
3. இலக்கியப் பேரவை.
4. பெரியக்கா ...... வி. சிங்காரவேலன்
5. சிறுகதை எழுதுங்கள் ...... பொ. சண்முகநாதன்
6. என்னை உருவாக்கியவர்கள்...... புதுமைலோலன்
7. சர்ப்பவனம் ...... கணேசன்
8. மூற்போக்கு இலக்கியம் ...... மு. தளையசிங்கம்
9. மல்லிகைப் பூ ...... இரா. இளஞ்செழியன்
10. என்னைக்கவர்ந்த என் கவிதை ...... திமிலைத்துமிலன்
11. பட் பட் ...... தாண்டவக்கோன்.
12. நாடகவிமர்சனங்கள்
13. வவனியாவில் நடனப்பள்ளி.
14. சிந்தனைக் கண்ணீர் ...... சிற்பி
15. அறிவுக் கதிர்.



பாலன் வெளியீடு

# எங்கள் கலைச்செல்வி

பூரிப்...பூ!

கலைச்செல்வி தீபாவளி மலர் கண்டு பூரிப்புற்றேன். 'ஸ்ரைக்' நன்று. "முற்போக்கு இலக்கியம்" வெகு நன்று. எதிலும் பின்தங்காது 'கலைச்செல்வி முன்னேறிவருவது காண உளம் மகிழ்வுறுகின்றது.

கல்முனை, மருதூர்கய்யாம்.

உரிமைப் போர்!

'கலைச்செல்வி' மிகவும் நன்ருக இருக்கிறது. இங்கு வந்தவுடன், 'நான் முதல், நீ முதல்' என்று அதைப் பார்ப்பதற்கு வீட்டில் சண்டை.

பேராதனை, கமலா.

வீ.கே—ஓ. கே!

கலைச்செல்வி இதழுக்கு ஓவியர் வீ. கே. ஓவியம் வரைவதையிட்டு மகிழ்ச்சி. இனிமேல், இன்னுமதிக் கவர்ச்சியை எதிர்பார்க்கலாமல்லவா?

பேராதனை, செ. யோகநாதன்.

உச்சிக்கதை!

சென்ற இதழில் வெளியான 'செங்கை ஆழியானி'ன் "உச்சிப் பொழுது" என் உள்ளத்தைக் கொள்ளை கொண்டு விட்டது. நான் 'கலைச்செல்வி' ஆசிரியராக இருந்திருந்தால் அந்தக் கதைக்கு இரண்டாம் பரிசு கொடுத்திருப்பேன்.

நவாலி வடக்கு, R. பரமகுரு.

"உச்சிப்பொழுது" உண்மையாகவே மிகவும் நன்ருக இருந்தது, உடனே மற்றக் கதைகளையும் படித்ததுமட்டுமின்றிப் பழைய 'கலைச்செல்வி' இதழ்களையும் எடுத்து வைத்துப் படித்தேன். இப்படியான சிறந்த கதைகளையுடைய பத்திரிகை எங்கள் நாட்டில் பதிப்பாகின்றதை எண்ணி மகிழ்ச்சி அடைகின்றேன்.

திருமலை. ச. ஞானமனோஹரி.

சுவே – சுவை!

சு. வே யின் 'ஸ்ட்ரைக்' சிறந்த கதை, நீங்கள், அவரைப் பற்றிக் குறிப்பிட்டது சரிதான், சொல்ல வேண்டியதைச் சுவையுடன் சொல்லும் அவர் வாழ்க.

கொட்டாஞ்சேனை, க. பத்மநாதன்

கதையுகம்!

காலத்திற்கேற்ற நல்ல கதை தளையசிங்கத்தின் 'புதுயுகம் பிறக்கிறது! குப்பைக் கதைகள் வெளிவரும் இந்த நாட்களில் அந்தக் கதை குன்றுமணியாக இருக்கிறது.

சிலாபம், ப. சரஸ்வதி

நல்ல தீர்ப்பு!

"கலைச்செல்வி' பற்றி செல்லப் பாவும் விஜயபாஸ்கரனும் பெரிதும் பாராட்டிச் சொன்ஞர்கள். நான் சில இதழ்கள் பார்த்ததுண்டு. 'கலைச் செல்வி' முதலாவது ஆண்டு மலர் எனக்குக் கிடைத்தது. படித்துச் சுவைத்து மகிழ்வுற்றேன். 'கலைச் செல்வி' தீபாவளி மலர் முகப்புத் தோற்றம் வண்ணமும் வசீகரமும் பெற்றுத் திகழ்கிறது. இலங்கையர்கோன் நினைவைக் கௌரவித்திருப்பது போற்றுதலுக்குரியது.

சென்னை-5 வல்லிக்கண்ணன்.

சிறுவர்களுக்கொரு சிறப்பான செய்தி!

உங்களுக்கென ஒரு சுவையான தொடர்கதை.

## இரட்டையர்கள்

பாமா ராஜகோபால் எழுதுகிருர்.

கலைச்செல்வி பொங்கல் மலரில் ஆரம்பமாகின்றது.



# ஜெய் ஹிந்த்!

தொல்லை தருகின்றது எல்லை. இந்தத் தொல்லையை இல்லையாகச் செய்வதற்கு —

அன்போடு பேசுவோம் என்றது
[இந்தியா.
வன்போடு வாதிடுகின்றது சீனா.
நேசக் கரம்நீட்டியது இந்தியா.
நாசக் கரம் காட்டுகின்றது சீனா.

ஆகவேதான்,
இந்தியாவின் எல்லையிலே, இமயத்தின் விளிம்பிலே நடக்கின்றது போர்.

அன்புக்கும் ஆக்கிரமிப்புக்குமிடையே போர்.
அறத்திற்கும் மறத்திற்குமிடையே போர்.
நீதிக்கும் அநீதிக்குமிடையே போர்.
வாய்மைக்கும் வஞ்சனைக்குமிடையே போர்.
நேர்மைக்கும் நீசத்தனத்திற்குமிடையே போர்.
பண்புக்கும் பாலாத்காரத்திற்குமிடையே போர்.
சுதந்திரத்திற்கும் சரண்டலுக்குமிடையே போர்.
தியாகத்திற்கும் திருட்டுத் தனத்திற்குமிடையே போர்.
நல்லவர்க்கும் அல்லவர்க்கு மிடையே போர்.
இந்தியாவுக்கும் சீனாவுக்குமிடையே போர்.

இந்த நேரத்தில் நாம் ஒன்றுகூற விரும்புகின்றோம்; அதை உறுதியுடன் கூறுகின்றோம்.

தியாகமே உருவமாக, உண்மையே உள்ளமாக, நேர்மையே பார்வையாக நீதியே கவசமாகக் கொண்டு இந்தியாவின் இணையற்ற தலைவராக விளங்கும் நேருஜி அவர்களே!

நல்லவர்கள் எல்லாம் உங்கள் பக்கம்.
நாமெல்லாரும் உங்கள் பக்கம்.

நாடுகள் பல உங்கள் பக்கம்.
நியாயம் நேர்மை நீதி எல்லாம் உங்கள் பக்கம்.
உறுதி குலையா உள்ளங்கள் எல்லாம் உங்கள் பக்கம்.
இறுதி வெற்றி உங்கள் பக்கம்.
ஆமாம், இறுதி வெற்றி உங்கள் பக்கமே!

அது இலகுவில் கிடைக்கவேண்டும்; இப்பொழுதே கிடைக்க வேண்டும், என்பதுதான் எங்கள் பிரார்த்தனை.

---

# அன்பார்ந்த நேயர்களே!

வணக்கம், 'கலைச்செல்வி' யின் சந்தாப் பணத்தை நினைவூட்டி எல்லாருக்கும் எழுதியுள்ளோம். சில நேயர்கள் தொடர்ந்து மூன்று ஆண்டுகட்குத் தம் சந்தாப் பணத்தை அனுப்பவில்லை. அவர்களுக்கும் தவறாது நாம் 'கலைச்செல்வி' யை அனுப்பி வந்தோம். இந்த இதழ் கிடைத்ததும், சந்தாப் பாக்கிப் பணத்தை எல்லாரும் அனுப்புவீர்கள் என நம்புகின்றோம். அடுத்த ஆண்டிலிருந்து யாருக்குமே பத்திரிகையை இலவசமாக அனுப்புவதில்லை எனத் தீர்மானித்துள்ளோம்.


'அதிசயம், ஆனால் உண்மை' என்பதைப் போல் இருக்கின்றது, இந்த இதழில் வெளியாகும் "சர்ப்பவனம்". கட்டுரையை எழுதிய நண்பர் கணேசன் ஒரு விஞ்ஞானப் பட்டதாரி. கொழும்பில் ஒரு பிரபல கம்பனியில் கணக்காளராகப் பணிபுரிகின்றார்; சிறந்த மிருதங்க வித்துவான். எழுத்துலகிற்குக் கிடைத்துள்ள ஒரு புதிய நகைச்சுவை எழுத்தாளர் பொ.சண்முகநாதன். அவருடைய கட்டுரைகள் இனி அடிக்கடி 'கலைச்செல்வி' யில் இடம்பெறும். மிகக் குறுகியகாலத்தில் எல்லாரையும் கவர்ந்துவிட்ட "பலதும் பத்தும்" பகுதியை இந்த இதழில் வெளியிட முடியவில்லை. வருந்துகின்றோம். பொங்கல் மலரிலிருந்து அப்பகுதி தவறாது இடம்பெறும். அறிவுக்கதிர் பகுதிக்கு நாம் வகுத்துள்ள புதிய பரிசுத்திட்டத்தை வரவேற்பீர்கள் என நம்புகின்றோம். பொங்கல் இதழிலிருந்து, நண்பர் வீரமணி எழுதும் "திருக்குறள் கீர்த்தனை" களும் தொடர்ந்து இடம்பெறும்.


அடுத்த இதழ் பொங்கல் மலர். பிரமாதமாகத் தயாரிப்பதற்குத் திட்டமிட்டுள்ளோம். உங்கள் மனதைக் கவர்ந்துள்ள பல "கலைச்செல்வி" எழுத்தாளர்களும், இது வரை "கலைச்செல்வி" யில் எழுதாத சில பிரபல எழுத்தாளர்களும் மலரில் எழுதுகின்றனர். இனி மலரோடு சந்திப்போமே!

-ஆசிரியர்

# இலக்கியப் பேரவை

ஈழத்து இலக்கிய உலகில் ஒரு புதுமையான நிகழ்ச்சியாக, சென்ற 4-11-62 அன்று "கலைச்செல்வி" சார்பில் எழுத்தாளர் பேரவை ஒன்று கூட்டப்பட்டது. 'ஈழநாடு' திரு. இராஜ. அரியரத்தினம் பேரவையின் தலைவர். 'கலைச்செல்வி' சிறுகதைப் போட்டியில்வெற்றி பெற்றோருக்கு 'புதினம்' திரு. வரதராசன் பரிசில்களை வழங்கினார். 'சிறுகதைகள்' பற்றிய உரைக்கோவையில் மேல்நாட்டு சிறுகதைகள் பற்றித் திரு S. ஸ்ரீநிவாசன் M.A. அவர்களும், இந்தியச் சிறுகதைகள் பற்றித் திரு. தருமு. சிவராமூ அவர்களும் இலங்கைச் சிறுகதைகள்பற்றித்திரு. சு.வே. அவர்களும் பேசினார்கள். பேரவைப் படங்களை இங்கு மகிழ்ச்சியுடன் வெளியிடுகின்றோம்.—ஆசிரியர்





# மதிப்புரை

லீலா பஞ்சாங்க சித்திரக் கலண்டர்: வெளியிடுவோர்: லீலா ஸ்டோர்ஸ், 249, நொறிஸ் வீதி, கொழும்பு. விலை : ரூ.1.75.

தம் அறிவால், ஆக்க வேலைகளால், அரிய தியாகத்தால் மாநிலத்தை வாழ்விக்க வந்தவர்கள் பலர். இவர்களுட் சிலர் மத போதகர்களாகவும் சிலர் அரசியல்வாதிகளாகவும் சிலர் கவிஞர்களாகவும், எழுத்தாளர்களாகவும் இருந்து தொண்டு செய்துள்ளனர். இத்தகைய பெருமக்களை நினைவு கூர வேண்டியது நம் கடமையல்லவா? கொழும்பு லீலா ஸ்டோர்ஸ் உரிமையாளர் திரு சின்னத்துரை அவர்கள் மிகவும் இலகுவான ஆனால் மிகுந்த சக்திவாய்ந்த முறையில் இவர்கட்கெல்லாம் நினைவுச்சின்னம் அமைத்துள்ளார். இப் பெரியார்களின் நினைவு நாட்களில் அவர்களுடைய படங்களையும் குறிப்புகளையும் வெளியிட்டுத் தன் லீலா பஞ்சாங்கசித்திரக் கலண்டரை அழகாகத் தயாரித்திருக்கின்றார். பஞ்சாங்கத்தில் பார்த்து அறியவேண்டிய சகல விபரங்களும் முக்கிய சரித்திர நிகழ்ச்சிகளும். இதில் அடங்கியுள்ளன. இலங்கை – இந்தியாவில் வேறு எவருமே தயாரிக்காத இப் புதுமைக் கலண்டர் ஒவ்வொரு தமிழர் வீட்டிலும் அவசியம் இருக்க வேண்டியது. 'கலைச்செல்வி'க்கு அனுப்பிய அழகான கலண்டரையும் நாட்குறிப்பையும் நன்றியுடன் ஏற்றுக்கொள்கின்றோம்.

—ஆசிரியர்


மாணவர்களே! ஆசிரியர்களே!

உங்களுக்கொரு

**நற்செய்தி!**

உங்களுக்குத் தேவையான பாடப்புத்தகங்களை வரவழைத்துள்ளோம்

விடுமுறை காலத்திலும், விரும்பிய நேரத்திலும்

**புத்தகங்களை வாங்கிக் கொள்ளலாம்.**

எங்கள் புத்தகக்கடை

**பழைய பஸ் நிலையத்துக்கு முன்பாக உள்ளது.**

பஸ்ஸிலிருந்து இறங்கி, அதிக தூரம்நடக்கத் தேவையில்லை,

**பூபாலசிங்கம் புத்தகசாலை**

பெரியகடை யாழ்ப்பாணம்.

கலைச்செல்வி சிறுகதைப் போட்டியில் பாராட்டுப்பத்திரம் பெற்ற கதை.

நாற்பது பரப்புக் காணியையும் உள்ளடக்கிய ஒரு முள்வேலி. பிள்ளையாரின் காணி என்பதால்போலும் பனைகளும் தென்னைகளும் சடைத்துச் செழித்து வளர்ந்திருக்கின்றன. அந்தக் காணியின் தெருப்பக்கத்திலே ஒரு தென்னோலைப் படலையிருக்கிறது. அதைத்திறந்து கொண்டு உள்ளே போனால் முதல் தெரிவது பெரிய ஒரு அரசமரம். பிள்ளையார் அதற்கடியிலே வீற்றிருக்கிறார். அதற்கும் அப்பால், வளவின் நடுவிலே ஒரு சிறிய வடக்குப் பார்த்த மண் வீடு இருக்கிறது. வீட்டிற்கு முன்னாலே மேற்குப் பார்த்த ஒரு குசினி. ஏழடி உயரமான வேலி இவற்றைச் சுற்றி அணி செய்கிறது,

எட்டாம் பிறை நிலா வானத்தில் காய்கிறது. திடீர் திடீரென வடக்கே போகும் முகில்களுள் ஒழித்து விளையாடுகிறான் சந்திரன். சோளகக் காற்று வீசிச் செல்கிறது. பனையில் தொங்கும் காவோலைகள் சலசலக்கின்றன. அரசமிலைகள் ஒன்றோடொன்று அடித்து இரைச்சல் எழுப்புகின்றன.

நானும் அண்ணாவும், சின்னக்காவும் ஆளுக்கொரு சிரட்டையுடன் முற்றத்தில் அமர்ந்திருக்கிறோம். எங்கள் முன்னாலே கஞ்சிச்சட்டியிருக்கிறது. கஞ்சியை ஆற்றியபடி குந்தியிருக்கிறாள் பெரியக்கா. ஆவி பறக்கும் கஞ்சியையும், பக்கத்திலிருக்கும் தேங்காய்ச் சொட்டையும் மாறிமாறிப் பார்க்கிறேன் நான். வாயில் நீர் ஊறிக்கொண்டே வருகிறது.

# பெரியக்கா




பெரியக்கா ஆற்றுவதை நிறுத்துகிறாள். நாங்கள் சிரட்டைகளை நீட்டுகிறோம். முதல் தேங்காய்ச் சொட்டுகளைத் தருகிறாள். எனது சிரட்டை முதல் நிறைகிறது. ஊதி ஊதிக் குடிக்கிறேன். இடைக்கிடை தேங்காய்ச் சொட்டைக் கடிக்கிறேன். 'அவக் அவக்' கென்று குடித்துவிட்டு வெறுஞ்சிரட்டையை நீட்டுகிறேன்.

வி. சிங்காரவேலன்

மீண்டும் சிரட்டை நிறைகிறது அடிச்சட்டியிலே அகப்பை முட்டும் சத்தங் கேட்கிறது. அண்ணு குடித்து விட்டு சிரட்டையை நீட்டுகிருன். அரைவாசிக்குக் கஞ்சியை நிரப்பு கிருள் பெரியக்கா. கஞ்சி முடியப் போகிறது என்று தெரிந்ததும் குடித்த குறையில் சிரட்டையை நீட்டு கிறேன். சின்னக்கா என்னைக் கோபத்துடன் பார்க்கிருள்.

''ரண்டு சிரட்டை யெல்லோடா குடிச்சனி... அக்காவுக்குக் கொஞ்சந் தானே கிடக்கு'' என்கிருள் கோபத் துடன்.

''அவருக்கு மட்டும் கனக்கக் குடுத்திட்டு...'' அண்ணுவைப் பார்த்த படி சிணுங்குகிறேன் நான்.

''உன்னிலும் பார்க்கக் குறை யத்தானே எனக்கு'' என்றபடி கோபத்துடன் பார்க்கிருன் அண்ணு.

''எனக்குப் பத்தாது...'' அழுவது போல் பாசாங்கு செய்கிறேன் நான்.

பெரியக்கா தான் குடிக்க எடுத்த கஞ்சியில் அரைவாசியை எனது சிரட்டையுள் ஊற்றுகிருள். வெற்றி யுடன் அண்ணுவைப் பார்த்து விட்டுக் குடிக்கிறேன்.

❀ ❀ ❀

அப்பொழுது எனக்கு ஐந்து வயது இருக்கும், 'அம்மா' என்று நான் சரியாக உச்சரித்து அழைக்கு முன்னமே அம்மா இறந்து விட்டாள். ஐயாவோ படுத்த படுக்கை; எழும்ப முடியாத வருத்தம். அம்மாவின் செத்தவீட்டில் கோபித்துக் கொண்டு போன அம்மாவின் குடும்பத்தவரும் கவனிப்பதில்லை. சாப்பாட்டுக்காக உழைப்பதற்கு ஆட்கள் இல்லை. என்னிலும் பார்க்க மூன்று வயதிற்கு மூத்தவர்தான் அண்ணுவும். இந்த நிலையியே அநாதைகளாக, சாப்பாட் டுக்கு வழியில்லாமல் அலைய வேண்டிய எங்களைக் காப்பாற்றியவள்தான் பெரியக்கா.

அப்பொழுது பெரியக்கா குமர்ப் பெண். இருபது வயது இருக் கும். சிவந்த மேனி, பக்கத்து வீட் டுச் சுவரில் தொங்கிய சரஸ்வதியின் முகத்தைப் போன்று அழகிய முகம். பெயரும் அழகம்மா என்பதுதான்.

காகங்கள் கரைவதற்கு முன்பே நான் விழித்து விடுவேன். குசினிக் குள் விளக்கு எரிந்து கொண்டிருக் கும். கண்களைத் துடைத்துக் கொண்டு, குசினிக்குள் ஓடிப் போய் நடுக்கப்புடன் உட்கார்ந்து விடு வேன். முன்னால் உள்ள 'சுளகில்' அடுக்கி வைத்திருக்கின்ற இடியப் பங்களிலிருந்து ஆவி பறந்து கொண் டிருக்கும். அக்காவின் கைகள் இடியப் பத்தைப் பிழிந்தபடி இருக்கும். அண்ணு முகங்கழுவித் திருநீறு பூசிக் கொண்டு இடியப்பப் பெட்டியுடன் வருவான். இடியப்பத்தை 'பிணையல் பிணையலாக அடுக்கி பெட்டியில் வைத்து முடிப்பதற்கு முன், சின் னக்கா இடித்த சம்பலுடன் வந்து விடுவாள். சம்பல் நிறைந்த கிண்ணத்தையும் இடியப்பத்துக்கு நடுவில் வைத்து 'மூடலால்' மூடி தலையில் தூக்கி வைத்துக் கொண்டு வெளியே நடப்பான் அண்ணு.

இடியப்பம் அவித்து முடிப்ப தற்குள் வீடு துப்பரவாக்கும் வேலை யும் முடிந்து விடும். எனக்கும் அண் ணனுக்கும் இரண்டு, இரண்டு இடி யப்பம் கிடைக்கும். போதாததற்குப்

பழஞ்சோறு.

ஓய்வு என்பது இல்லாமலே மீண்டும் வேலைதொடங்கி விடுவார்கள். கிணத்தடியில் 'நனையப்'போட்ட தென்னோலைகளை இழுத்து வந்து போடுவாள் சின்னக்கா. பெரியக்கா பின்னத் தொடங்குவாள். இயந்திரம் போல கைகள் வேலை செய்யும். சின்னக்கா ஒரு கிடுகு பின்னுவதற்கு முன் பெரியக்கா மூன்று கிடுகுகள் பின்னி விடுவாள்.

பின்னுவதற்குத் தென்னோலைகள் இல்லாதபோது பனையோலைச் சார்வுகள் அக்காவின் கைபட்டு பாய், பெட்டி, கடகம், நீத்துப்பெட்டி, அடுக்குப்பெட்டி, பின்னல்பெட்டி' கொட்டப் பெட்டிகளாக மாறிக் கொண்டிருக்கும். இரவு சாப்பிட்டுவிட்டு, முற்றத்தில் நிலவிலே இருந்து பெட்டி பொத்தத் தொடங்குவாள். நாங்கள் எல்லோரும் அக்காவைச் சுற்றி அமர்ந்து கொள்வோம். 'அழகாபுரி, அழகாபுரி என்றொரு பட்டணத்திலே' என்று அக்கா கதை சொல்லத் தொடங்கினால், சின்னக்காவும் அண்ணாவும் 'உம்...உம்' என்றபடி கேட்டுக் கொண்டே இருப்பார்கள்,

எனக்கு நித்திரை கண்ணைச் சுற்றத் தொடங்கிவிடும். அக்காவின் மடியிலேயே படுத்து நித்திரையாய் விடுவேன். கண்விழிக்கும் போது அண்ணாவுடனோ அல்லது வெறுந் தரையிலோதான் படுத்திருப்பேன்.



உங்கள் கண்ணைப் பாதுகாக்க
★
இலவசமான கண்பரிசோதனை
★
அழகு மிக்க கண்ணாடி பிரேம்கள்
★
அப்துல்லா அன் கோ
127, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி 486

விழித்தவுடன் அக்காவைத்தான் கூப்பிடுவேன்.

❁ ❁ ❁

ஒரு நாள் விழித்த போது அக்காவைப் பக்கத்தில் காணவில்லை. எங்கும் கும்மிருட்டாக இருந்தது வீட்டுக்கு வெளியே எட்டிப் பார்த்தேன். விடியப்போவதின் சாயலேயே காணவில்லை. ஆந்தைகள் இரண்டு அரசமரத்திலிருந்து அலறின. பக்கத்திலே பனங்காய் ஒன்று 'பக்'கென்று விழுந்தது. திடீர் திடீரென யாரோ நடப்பதுபோல் இருந்தது. எனக்குப் பயமாக இருந்தது. நடுக்காட்டில் கண்ணைக் கட்டிவிட்டது போல் இருட்டில் அகப்பட்டுக் கொண்டு விழித்தேன். 'அக்கா' என்று மெல்ல அழைத்துப் பார்த்தேன். பதிலில்லை. பயத்தில் 'அக்கா' என்று மெல்லச் சொல்லியபடி வெளிப் படலையைத் திறந்து கொண்டு உள்ளே வந்தாள் அக்கா. நான் கட்டிப் பிடித்துக் கொண்டேன். என்னை அணைத்துக் கொண்டு வெளியே வந்தாள்.

''ஆர் அழுதது? சின்னவனே'' என்று யாரோ கேட்டார்கள். அது அத்தானுடைய குரல்தான். வீட்டின் கோடிப்பக்கத்துக்கு அப்பால் நின்ற வேம்புக்குக் கீழே நின்றார். அவர் எங்களுடன் கதைப்பதில்லை. ஆனால் அக்காவுடன் மட்டும் இடைக்கிடை இரவில் சந்தித்து இரகசியமாகக் கதைப்பார்.

கொஞ்ச நேரம் ஒன்றும் பேசாமலே நின்றார்கள் இருவரும். ''என்ன செய்கிறது. நான் சொன்ன மருந்தைக்குடி...... அதெல்லாம் சரியாய்ப் போயிடும்'' என்றார் அத்தான்.

''அதிலும் பாக்க நான் சாகிறதுக்கு ஏதேனும் மருந்து வேண்டித் தாருங்கோ......குடிச்சுச் சாகிறன்'' அக்காவின் குரலிலிருந்து அக்கா அழுகிறாள் என்பது தெரிந்தது. அக்கா அழுதால் எனக்கும் அழுகை வந்துவிடும்.

''நீங்கள் என்னைக் கலியாணங் கட்டுங்கோ இல்லாட்டா உலகத்தட்டைத் தப்பேலாது, நான் கெட்டவள் என்று பேர் கேட்டுக் கொண்டு உயிரோடை இருக்கேலாது'' அக்கா அழுது அழுது அத்தானின் தோள்களைப் பிடித்துக் கொண்டாள்.

''கலியாணங் கட்டமாட்டன் எண்டே சொல்லுறன்''

''இனிமேல் காலங்கடத்தாமல் இண்டைக்கோ நாளைக்கோ செய்ய வேணும்''

அத்தான் ஒன்றும் பேசாது நின்றார்.

''உங்களைக் கெஞ்சிக் கேக்கிறன் ...நான் உசிரோடை இருக்கவேணுமெண்டு விரும்பினால் என்னை ஏத்துக் கொள்ளுங்கோ......''

''அப்பிடியெண்டா நீ வா, என்னோடை''

''உங்கடை வீட்டையோ?''

''பின்னை... வேற யெங்க போறது...''

''இஞ்சை இதுகளை இப்பிடி ஒண்டுக்கும் வழியில்லாமல் விட்டு விட்டோ...?''

''அதுக்குமில்லை இதுக்குமில்லையெண்டால்... நான் என்ன செய்யிறது. என்ர தேப்பன் தாயை என்னாலை வெறுக்கமுடியாது. வருகில் எப்பவெண்டாலும் வா, நான் கூட்

சுத்தமாக

சுகாதார முறைப்படி

நவீன இயந்திரங்களினால்

விலையுயர்ந்த மூலப்பொருட்களைக் கொண்டு

தயாரிக்கும்

பேபி




மார்க்

# ஸ்பெஷல்

## பானங்களையே அருந்துங்கள்

எல்லா இடங்களிலும் கிடைக்கும்.

தயாரிப்பாளர்

**சுப்பிமணியன் சோடாக் கம்பெனி**

போன்: 97 வல்வெட்டித்துறை தந்தி: SODA

கிளை:

## ஸ்ரீஜு ஸ்ரோர்ஸ்

போன்: 373

2/B, ஸ்ரான்லி ரோட்,

**யாழ்ப்பாணம்**

தந்தி ESVES

டிக்கொண்டு போறன். ஆனல்உன்ர வீட்டை மறந்துவா...''

அக்கா மௌனமாக நின்ருள். அழுகைக் குரல் மட்டும் மெதுவாகக் கேட்டுக் கொண்டிருந்தது.

''ஏதோ... நாளைக்கும் இந்நேரம் வாறன். யோசிச்சுச் சொல்லு. எப்ப வாறதெண்டாலும் எனக்குச் சரிதான். நான் வாறன்'' அத்தான் வெளியே சென்று விட்டார். அக்காவுடன் நானும் படுத்துவிட்டேன்.

அடுத்த நாள், மீன் வாங்கி, நல்ல கறி சமைத்தாள் பெரியக்கா. சோற்றைப் போட்டுத் தந்து நாங்கள் சாப்பிடுவதையே பார்த்துக் கொண்டிருந்தாள். 'சீத்தை'ச் சேலை வாங்கி எனக்கொரு கால்முட்டச் சட்டையும், சின்னக்காவுக்கொரு பாவாடை சட்டையும் தன்கையாலேயே தைத்தாள். அண்ணுவுக்கு ஒரு சாரம் வாங்கினுள். ஐயாவுக்கு மருந்து கொடுத்து 'கரையலும்' போட்டுக் கொடுத்தாள்.

மறுநாள் நான் கண் விழித்த போது பெரியக்காவைக் காணவில்லை. எல்லோரும் திகைத்துப் போயிருந்தனர்.

''அக்கா எங்கேயெண்டு எனக்குத் தெரியுமெல்லோ'' என்று நான் துள்ளிக் குதித்தேன்.

''எங்கேயடா... எங்கயடா போனவ?'' என்று சின்னக்கா ஆவலுடன் கேட்டாள்.

''அத்தான் வந்து கூட்டிக் கொண்டு போவிட்டாரெல்லோ''

எல்லோரும் ஒருகணம் வியப்புடன் விழித்தனர்.

''நான் அக்காட்டைப் போகப் போறன்'' என்றபடி கடவாயைத் துடைத்துக்கொண்டு எழுந்தேன்.

ஐயா சின்னக்காவைக் கூப்பிட்டு ஏதோ சொன்னர். உடனே சின்னக்கா, ''போகாதை, ஐயா போக வேண்டாமாம்'' என்ருள்.

''எனக்குப் பசிக்குது...''

''நான் இடியப்பம் அவிச்சுத் தாறன்...அங்கை போகாதை'' என்ருள் சின்னக்கா.

''நாலு···ஐஞ்சு தரவேணும்''

''ஓம் தாறன்''

ஏதோ இரண்டு மூன்று நாட்கள் வழக்கம் போல இரண்டு இரண்டு இடியப்பங்கள் கிடைத்தன. ஒரு நாள், திடீரென்று 'இணடைக்குப் பழஞ்சோறுதான்' என்று சின்னக்கா சொன்னுள். அதற்குப் பின்பு இருந்துவிட்டு எப்பொழுதாயினும் தான் இடியப்பம் கிடைக்கும். பெரியக்காவைப் பார்க்க ஆசையாக இருந்தது.

அத்தானின் வீடு எங்கள் ஊரிலேயேதான். எனக்கு போகிற வழியும் தெரியும். ஒரு நாள் மாலை அத்தானின் வீட்டுக்கு ஒருவருக்கும் தெரியாமல் ஓடிவிட்டேன். பெரியக்கா தனியாகத்தான் இருந்தாள். என்னைக் கண்டதும் தூக்கிக் கொஞ்சினுள். மூக்கைப் 'பிடித்து'ச் சழியை எறிந்து விட்டு, மத்தியானம் என்ன சாப்பிட்டனி?'' என்ருள்,

''ஒண்டு மில்லை......''

அக்காவின் கண்களால் கண்ணீர் ஓடியது. சோறுபோட்டு மீன்

கறியுடன் குழைத்துத் தீத்தினுள். நான் வயிறு நிறையச் சாப்பிட்டேன். என்னுடைய வாய் கையைக் கழுவி விட்டு, "ஆக்கள் வரமுதல் நீ ஓடு" என்ருள்,

"நீ எப்ப வருவாய் அக்கா".

"நான் பிறகு வாறன். நீ பொழுது படக்குமுதல் வீட்டை ஓடிப் போ".

நான் வீட்டுக்கு ஓடிவந்து விட்டேன். சின்னக்கா கிடுகு பின்னிக் கொடுத்த, காசுக்கு, பாண் வாங்கிச் சாப்பிட்டுக் கொண்டிருந்தாள். என்னைப் பிடித்து நல்ல 'பூசை' கொடுத்து, "இனிமேலங்கை போனு... காலை முறிச்சுப் போடுவன்" என்று நெருடினுள்.

ஆனல் எத்தனை நாட்கள்தான் சோறுசாப்பிடாமல் இருப்பது? பசி வயிற்றைக்கிள்ள பெரியக்காவின் நினைவு மனதை அரித்தது. பின் பொருநாள் ஒருவருக்குந் தெரியாமல் பெரியக்காவிடம் ஓடினேன். குசினியை நோக்கி ஓடிய என்னை 'ஆற்ரு உது" என்ற சத்தம் நிறுத்தியது. அப்படியே நின்றேன்.

திண்ணையிலிருந்த மாமி இறங்கி எனக்குக்கிட்டே வந்தாள். "ஆற்ரு உது... எட நீயோ... ஏன்ரா இஞ்ச வந்தனி?.,

"நான் அக்காட்டை வந்தனுன்".

கொக்காட்டையோ?... இஞ்ச வந்து சாப்பிட்டுப் போறியாம......



கொப்பன் குடுத்த சீதனத்திலே சாப்பிட்டுப் போறியே... அவள் இஞ்ச இல்லேப்போடா"

''உங்கதான்... நீ பொய் சொல்லுருய்"

''இல்லே யென்டா கேட்கமாட்டியே, அடி வேண்டாம ஓடு"

''அடி பாப்பம்"

"என்ன சொல்லுருய்..." பக்கத்தில் கிடந்த ஒரு கம்பை எடுத்தாள் மாமி.

''அடிபாப்பம்... அடிச்சியெண்டா மண்டை உடைச்சுப் போடுவன்... ஓ..." ஒரு கல்லை எடுத்து எறிவது போல் இலக்குப் பார்த்தபடி நின்றேன்.

''ஐயோ... எறிய வந்துவிட்டான்... குறுக்காலே போன துகள்... இதுகளாலே இருக்க நிக்க வழி இல்லே" மாமியின் குரல் கேட்டு அக்கா வெளியில் வந்தாள். அக்காவைக் கண்டதும் அவளிடம் ஓடினேன்.

நடந்ததைப் பார்த்துக் கொண்டு நின்ற அத்தான் அங்கு வர மாமி உள்ளே போய்விட்டாள்.

"டேய்... இனிமேல் இங்கை வராதை ...என்ன!" என்று என்னைப்பார்த்துச் சொல்லி விட்டு, ஏதும் சோறு கீறு கிடந்தால் குடுத்துக் கலேச்சுவிடு" என்று அக்காவிடம் சொன்ஞர்.

என் முதுகில் 'பளீர் பளீர்' என அடி விழுந்ததும்திகைத்துவிட்டேன். ''போடா சோறுமில்லே ஒண்டுமில்லே" அழுது கொண்டு என்னை ஏசினுள் பெரியக்கா. நான் அழுதபடி, கால்களைக் கட்டிப் பிடித்துக் கொண்டேன்.

''உனக்குப் பொல்லாத கோவம் வருகுது...... உன்னைக் கூட்டியந்தது போதாதே... எல்லாரும் வந்தால் உன்ர மனம் நிறையுமே... வந்தநாள் தொட்டு விடியாத மூஞ்சியை நீட்டிக் கொண்டிருக்கிருய்... நீ என்னேடை வாழவேணுமெண்டால் சந்தோசமாயிரு. இல்லேயென்டால் என்னை விட்டு விட்டு கொப்பரட்டைப் போய்விடு" அக்காவை ஏசிவிட்டு விறுக்கென்று வெளியே போஞர் அத்தான்

அன்று சாப்பாடு கிடைக்காமலே வீட்டுக்குத் திரும்பி வந்துவிட்டேன் 'பசிக்குது சோறுதா' என்று அழுதபடியே நின்றேன். படுக்கையில் கிடந்த ஐயாவிடம் போய் 'பசிக்குது ......பசிக்குது' என்று கத்தினேன்.

பசிக் களைப்புடன் அழுத களைப்பும் சேரவே சோர்ந்து போய் வெறுந் தரையில் படுத்துவிட்டேன்" வெளிப்படலே திறக்கும் சத்தம் கேட்டது. எனது பார்வை படலேப்பக்கம் திரும்பியது. பெரியக்கா வந்து கொண்டிருந்தாள், ''அக்கா அக்கா" என்றபடி ஓடிப்போய் கால்களைக் கட்டிப் பிடித்துக் கொண்டேன்.

மீண்டும், பழையபடி அடுப்பை மூட்டிஞள் பெரியக்கா.

---


## கலேச்செல்வியின்

ஆண்டுச் சந்தா ஆக நான்கு ரூபாதான். தயவு செய்து அதை உடனே அனுப்புவீர்களா?


---

# சிறுகதை எழுதுங்கள்!

## பொ. சண்முகநாதன்

இக்காலத்தில் கதை எழுத வேண்டுமென்ற ஆசை எல்லோருக்குமே இருக்கிறது. அப்படியான ஆசை இருந்தும் எழுதத் தெரியாமலும் முடியாமலும் தத்தளிப்பவர்களுக்கு இச் சிறு கட்டுரை வழிகாட்டுகிறது. இக்கட்டுரை மூலம் எழுதவும் படிக்கவுந் தெரிந்த யாரும் கதைகள் எழுதிப் புகழும் பணமும் பெறலாம்.

கதை எழுத முதலில் தேவைப்படுவது தங்குதடையின்றி எழுதக்கூடிய பேனு, 'புல்ஸ்காப்' பேப்பர்கள், லோங் என்பலப்புகள், முத்திரைகள், வசதியாக இருந்து எழுதுவதற்கேற்ற மேசை நாற்காலி முதலியன. இத்துடன் நூல்கள் இரவல் பெறக்கூடிய நூல் நிலைய வசதி அல்லது நண்பர்கள். இவ்வளவு வசதிகளும் உங்களுக்கு இருக்கிறதா? இருப்பின் எழுத நீங்கள் அரைவாசி தகுதியானவர் என்று பொருள். மேற்படி வசதிகள் இல்லாதவர்கள் அவைகளைத் தேடியதும், கட்டுரையைத் தொடர்ந்து படிக்கலாம்.

நீங்கள் இதுவரை படித்த கதைகள் எத்தனையோ உங்கள் மனதில் மறக்காமல் இருக்கலாம். அவைகளில் ஒரு பத்துச் சிறுகதைகளை நன்கு ஞாபகப்படுத்திக் கொண்டு அவற்றிலுள்ள சம்பவங்கள் நிகழ்ச்சிகளை ஒவ்வொன்றிலும் கொஞ்சம் கொஞ்சம் எடுத்து மாற்றி மாற்றிப் பாருங்கள்; சிறுகதை வந்துவிடும். இது சிறிது கடினமாக இருந்தால் கதைகளை முன்னுக்கு வைத்துப் பார்த்துக் கொண்டே இந்த வேலைகளைச் செய்யுங்கள்.

இரண்டாவது வழி. நீங்கள் தமிழல்லாத பிறமொழி ஒன்றை இரகசியமாக ஒருவருக்கும் தெரியாது கற்க வேண்டும். அந்த மொழியை நீங்கள் பேசவோ, எழுதவோ, தெரியுமென்று ஒருவருக்கும்காட்டிக்கொள்ளக்கூடாது. இதன்பின் நீங்கள் அம்மொழிக் கதைகளை இரகசியமாக வாங்கி மொழிபெயர்த்து விடுங்கள்.

மேலே காட்டிய இரு வழிகளாலும் நீங்கள் சிறந்த எழுத்தாளர்களாக வரமுடியும். ஆரம்பத்தில் இந்த வழிகளைக்கொண்டு சிறுகதைகள் எழுதுங்கள். பின் போதிய பயிற்சியும் திறமையும் ஏற்பட்டபின் நாவலையும் நாடலாம். இந்த வழிகளைப் பின்பற்றி எழுதத் தொடங்கியதும் ஏதாவது பேட்டியின் போதோ பேச்சுவாக்கிலோ நீங்கள் யாருடைய எழுத்தில் ஆராய்ச்சி நடத்தினீர்களோ அவர்களை உங்களது அபிமான எழுத்தாளர் என்றோ அவர்களது எழுத்துக்களைப் படித்ததென்றோ சொல்லிவிடக்கூடாது. பிறமொழிகளிலிருந்து கதைகள் தயாரித்தவர்கள் தங்களுக்குப் பிறமொழி தெரியாதென்றும், பிறமொழிக்

கதைகளைப் படிப்பதில்லையென்றும் சொல்லிவிட வேண்டும். இல்லாவிட்டால் அகப்படுவீர்கள்.

இது தவிர இன்னொரு முறையிலும் கதைகள் எழுதலாம். சில வேளைகளில் உங்களுக்குத் தெரிந்தவர்கள் உங்களிடம் தாங்கள் எழுதிய கதையைக் காட்டி அல்லது தங்களது கற்பனையில் தோன்றிய கதையைச் சொல்லி "எப்படி என் கதை? பத்திரிகைக்கு அனுப்பலாமா?" எனக் கேட்பதுண்டல்லவா? அப்பொழுது நீங்கள் அக்கதை கூடாதென்றால் "நல்லது; அனுப்பிப்பாரும்" என்று சொல்லுங்கள். உண்மையிலேயே நல்லதென்றால் "நல்ல கதையாயிருக்கு. போயும் போயும் எங்கள் இருவருக்கும் ஒரே கற்பனையா தோன்ற வேண்டும்? இதே கதைபோல் நானும் ஒரு கதை எழுதி இன்றுதான் பத்திரிகைக்கு அனுப்பியிருந்தேன்" என்று ஒரு பொய்யைச் சொல்லுங்கள். நண்பர் அவ்வளவுடன் நின்றுவிடுவார். இதன்பின் நீங்கள் நண்பரின் கதையை உடனே எழுதிப் பத்திரிகைக்கு அனுப்பி விடுங்கள்.


**பொங்கல் மலரில்!**

# தவறு

நாவேந்தன் எழுதிய
சிறுகதை வெளியாகின்றது.


நீங்கள் எந்த வழியில் கதைகள் எழுதினாலும் கதைகளுக்குத் தலைப்பிடுவதையும், பாத்திரங்கள் ஊர்கள் தெருக்களுக்குப் பெயர் சூட்டுவதையும் மட்டும் என்றாலும் உங்களது சொந்த அறிவிலிருந்து எடுத்து எழுதவும்.

இப்பொழுது உங்களுக்கு கதை எழுதுவது மிகவும் கடினமாகத் தோன்றுது என எண்ணுகிறேன். ஆனால் இன்னும் ஒரு கட்டத்தைத் கடந்தால்தான் நீங்கள் வெற்றிகாணமுடியும்.

பத்திரிகை ஆசிரியர்கள் இருக்கிறார்களே! அவர்களுக்கு இந்தப் புது எழுத்தாளர்கள் என்றால் மிகவும் ஆத்திரம். கதை கிடைத்ததும் 'திருட்டுக் கதையாக இருக்கும் அல்லது தகுதியற்றதாயிருக்கும்' என வாசிக்காமலேயே குப்பைக் கூடைக்குள் போட்டுவிடுவார்கள். முன்பு எழுதியவர்களாக இருந்தால் ஒருவித தயக்கமுமின்றிப் பிரசுரித்து விடுவார்கள்.


இதற்கு நீங்கள் செய்யக்கூடிய வழி கதைகளுடன் அனுப்பும் கடிதத்தில் ஆரம்ப எழுத்தாளன் என்பதை "...நான் முதல் முதல் எழுதும் கதை இத்துடன்..." என்று குறிப்பிட்டுக் காட்டிவிடக் கூடாது. பழம் பெரும் எழுத்தாளர்கள் எழுதுவதுபோல் "...உங்கள் பத்திரிகைக்கு நான் எழுதுவது இதுதான் முதல் தடவை..." என்பதுபோல் தொடங்க வேண்டும்.

இனி, நீங்கள் கதைகள் எழுதலாம்.

# என்னை உருவாக்கியவர்கள்

- புதுமைலோலன் -

கலைச்செல்வி 'சிற்பி இந்தக் கேள்வியைக் கேட்டபின்பே 'என்னை உருவாக்கியவர்கள்' யார் என எண்ண ஆரம்பித்தேன். இது தெரியாதா? பெற்ருர் உருவாக்கினர் என்பதே நியாயமானது. அவர்கள் என்னை இந்த உலகில் வாழ, கல்வி தராது விட்டால், யான் என்ன செய்யமுடியும். கல்விதானே என்னை எழுதவோ பேசவோ தூண்டிற்று. அதுவும் நல்ல பாட நூல்கள் தான் எனக்கு அத்திவாரம் என்பேன். இப்போதைய சில எழுத்தாளரின் எழுத்துக்களைப் படித்தால் சரியாக வசனம் அமைக்கவே முடியாது விழிக்கவேண்டியது தான்.



"உங்களை எழுத்துலகில் உருவாக்கியவர் யார்?" என்றல்லவா கலைச்செல்வி கேட்கிருள்.

சரி சரி அதுவா;— யான் பலாலி ஆசிரியர் கலாசாலையில் படிக்குங் காலத்தில், எமக்குத் தமிழ் கற்பித்தார் பண்டிதர் பொ. கிருஷ்ண பிள்ளை அவர்கள். இவர்களிடம் தமிழ் கற்க ஆரம்பிக்கமுன்பு, இளமைக் கல்வி தந்த நாவலர் பாட சாலையில், தமிழை முறையாக, வித்துவான் ந. சுப்பையாபிள்ளை அவர்களும், வை. ஆத்மநாதசர்மா அவர்களும் ஊட்டி என்னை ஓரளவில் உருவாக்கியிருந்தனர். அதனுல் பண்டிதர் கிருஷ்ணபிள்ளை அவர்கள் மூலம் இன்னும் சிறப்புற்ற தென்பேன். கிருஷ்ணபிள்ளை அவர்கள் சஞ்சிகைகள், புதிய தமிழ்நூல்கள் பற்றியே வகுப்பு நேரமெல்லாம் கூறுவார். அதனுல் புதிய, பிற்கால இலக்கியங்களில் ஒரு மோகம் ஏற்பட்டது. இக்காலத்திலே வாசிக்கும் விருப்பு அளவுக்கு அதிகமாக என்னைப் பற்றிக் கொண்டது! கல்கியும் அகிலனும் ரகுநாதனும் என்னை மிகவும் கவர்ந்தார்கள், இவர்களது கதை நூல்களைத் தேடித் தேடி வாசித்தேன். டக்டர். மு. வ. அவர்களது கட்டுரை நூல்களும் என்னைக் கவர்ந்தன. எதையும் படிக்கும் ஆசை என்னிடம் குடிகொண்டு விட்டது. ஆகவே என்னை உருவாக்கியவர்களில்-நூல் வடிவில் - அகிலனும் கல்கியும் மு. வ. வும், ரகுநாதனும் உதவியுள்ளனர்.

வாசித்து வாசித்து நூல் உல

ஈடு மீட்கவா!  வீடு கட்டவா!!

சீதனம் கொடுக்கவா!!!

இதைப்போல் எதற்கும்

# இலங்கா நிதி லிமிற்றெட்

நவீன சேமிப்பிற் சேருங்கள்

இலாபத்துடன் கொடுக்கும் தொகை

| மாதவீதம் கட்டுவது | 30 மாதங்களில் | 60 மாதங்களில் | 100 மாதங்களில் |
|---|---|---|---|
| 10 ரூபா | 330 ரூபா | 750 ரூபா | 1300 ரூபா |
| 25 ரூபா | 825 ரூபா | 1800 ரூபா | 3250 ரூபா |
| 50 ரூபா | 1650 ரூபா | 3600 ரூபா | 6500 ரூபா |

மேற்குறித்த இலாபத்துடன்
ஒவ்வொருமாதமும் அதிட்டசாலிகளுக்கு
அதிட்டஇலாபமும் கொடுக்கப்படும்

கட்டுபவர் இறந்தால் உரித்தாளிக்கு
கட்டிய பணத்துடன் கால் பங்கும் கொடுக்கப்படும்.

மறுவிபரத்திற்கு:

**இலங்கா நிதி லிமிற்றெட்**

தலைமைக்கந்தோர்:

**திருநெல்வேலி வடக்கு, யாழ்ப்பாணம்.**

கிளை:

*284, காங்கேசன்துறை வீதி, வண்ணார்பண்ணை.*

கிலேயே என் பொழுதையெல்லாம் கழிக்கும் அதே காலத்தில் எழுத வேண்டும். பேசவேண்டும் என்ற ஆசை தளிர் விட ஆரம்பித்தது.

பேனவைப் பிடித்தேன். "ஏழை தாசியா?" என்ற ஓர் கதையை எழுதிச் சுதந்திரனுக்கு அனுப்பினேன். நான்கு கிழமைகளால் எனது சொந்தப் பெயரில் அக்கதை சுதந்திரனில் வெளியாகியது. என் முதற்கதையே பிரசுரம் பெற்றதென்பதைச் சில எழுத்தாளர்கள் நம்ப மறுக்கலாம் — நான் என்ன செய்ய, திருப்பி அனுப்பாது விட்டமைக்கு நானு பொறுப்பு. இதன் பின்பு எழுதவேண்டும் என்ற ஓர் வெறியே என்னைப் பற்றிக்கொண்டது. ஆசிரிய கலாசாலையில் லீவு கிடைக்கும் போதெல்லாம் எழுத ஆரம்பித்தேன். தினகரன், ஈழகேசரி, சுதந்திரன் என்பன என் கதைகளைப் பிரசுரித்தன. என்னுலும் எழுத முடியும் என்ற ஒரு நிலையையும் அடைய, ஆசிரிய பயிற்சியும் முடிந்து 'கிங்குறக்கொடா'வுக்கு முதன்முதல் ஆசிரியனுகக் கடமை ஏற்கப் போனேன். சிங்கள நண்பர்கள் மத்தியில் தனிமையில் படிப்பதும் எழுதுவதுமே என் தொழிலாயிற்று. அந்நேரத்தில் சுதந்திரனும் ஈழகேசரியும் பல கதைகளைப் பிரசுரஞ் செய்தன. சுதந்திரன் ஆசிரியராயிருந்த திரு. எஸ். டி. சிவநாயகம், ஈழகேசரி ஆசிரியராயிருந்த திரு. இராஜ-அரியரத்தினம் ஆகிய இருவருமே எனக்கு ஆரம்ப நேரத்தில் உற்சாகம் தந்தவர்கள். அதாவது, பிரசுரஞ் செய்து என்னை எழுதத் தூண்டியவர்கள், இக்காலத்தில் ஈழத்தில் வெளிவரும் பத்திரிகையோ சஞ்சிகையோ எதுவாயிருப்பினும், அதற்கு என் படைப்பை அனுப்பிவைக்கத் தவற மாட்டேன்.

இப்படியாக வெளிநாட்டு வாழ்வு கிட்டத்தட்ட நான்கு ஆண்டுகள் ஓடின. பின்பு யாழ்ப்பாணப் பாடசாலைக்கு ஆசிரியராய் வந்த பிற்பாடு வரதர் அவர்களது நட்பைப் பெற்றேன். அவர் நடாத்திய ஆனந்தன் இதழின் இணையாசிரியரானேன். பத்திரிகை சம்பந்தப்பட்ட அனுபவம் அதனுலேயே கிடைத்தது. வரதர் அவர்களது தூண்டுதலால், பாடநூல்கள் எழுதவும் தொடங்கினேன். பாடநூல்கள் பத்துக்கு மேல் வரதர் வெளியீடாக வெளியாகின; அதனுல் ஊதியமும் கிடைத்தது. இக்காலத்தில்

## ஈழத்து முஸ்லிம் கவிஞர்கள்

ஈழத்திலே தரமான பல முஸ்லிம் கவிஞர்கள் இருக்கிறுர்கள். ஆனுல் அவர்களுக்குப் போதிய அறிமுகம் கொடுக்கப்படவில்லை. விமர்சகர்கள் இவர்களைத் தவற விடுகிருர்கள்; அல்லது தவருன குறிப்புகள் கொடுக்கிருர்கள். தக்க முறையிலே இக் கவிஞர்களை அறிமுகம் செய்து வைக்கும் புதிய கட்டுரைத் தொடர் கலைச் செல்வி பொங்கல் மலரில் ஆரம்பமாகின்றது. பிரபல முஸ்லிம் எழுத்தாளர் ஒருவர் எழுதுகின்ருர்.

அரசியல் சூருவளி ஈழத்தில் சுழன்றடிக்க ஆரம்பித்தது; தமிழ் மொழி ஏங்கித் தவிக்கும் சூழ்நிலையை ஆட்சிபீடம் ஏற்படுத்திற்று. என்னையும் அரசியல் அகப்படுத்திக் கொண்டது. தமிழரசுக்கட்சியின் தொண்டனுகி, சிலகாலம் 'தமிழரசு' என்ற இதழ் ஒன்றையும் நடாத்தி நட்டப்பட்டேன். இக்காலத்திலே அரசியல் கட்டுரைகள் பல எழுதிக் கொண்டேயிருந்தேன். இப்படியாக அரசியல் கட்டுரைகள் எழுத ஆரம்பித்த நேரத்தில், பல அரசியல் நூல்கள் படிக்க ஆசையுண்டாயிற்று. அண்ணுத்துரை, கருணுநிதி என்போரது புதுநடை செறிந்த அரசியல் நூல்களை நிறையப் படித்தேன். திராவிடநாடு படிக்காது விட்டால் நித்திரை வர மறுக்கும் நிலை. இப்படியாக எழுத்துலகில் என் பேனு கடமை செய்தது.

ஆகவே, என்னை உருவாக்கியவர்களையும், உருவாக்கிய ஏதுக்களையும் ஓரளவில் இச் சிறு கட்டுரையில் குறிப்பிட்டு விட்டேன் என்றே நம்புகின்றேன்.

எனினும் இவை தூண்டுதல்கள். தூண்டுதல்கள் பலன் தர உதவியவர், உருவாக வழி தந்தவர் யார்? — அவர் யாரா? — 'புதுமைலோலனி"ன் தன்னம்பிக்கையே அவர்.


நினைவுமலர்கள் வெளியிடுவோரே!
பாடசாலை அதிபர்களே!
புத்தக ஆசிரியர்களே!
பத்திரிகை நிர்வாகிகளே!

குறைந்த செலவில்
சிறந்த 'புளக்'குகள்
செய்யவேண்டுமாஞல்
எங்களுக்கு எழுதுங்கள்.

**Sri Lanka Block Makers**

131, MESSENGER STREET, : COLMBO.

திருச்சிக்கு அண்மையிலுள்ள மஞ்சத்திடல் கிராமத்தில் "சர்ப்பவனம்" இருக்கிறது. நாய், பூனை முதலியவை நம் வீட்டில் உலாவுவதுபோல் பலவித விஷப்பாம்புகள் சாஸ்திரிகளுடன் விளையாடுகின்றன; படுத்துறங்குகின்றன; இன்னும் பல சுவையான செய்திகளைக் கூறுகின்றது கட்டுரை.

# சர்ப்ப வனம்

கணேசன்.

இன்று நினைத்தால் ஏதோ கனவு போலத் தோன்றுகிறது. ஆம் சர்ப்பவனத்தைப் பார்த்த அந்த நிகழ்ச்சியைத்தான் குறிப்பிடுகிறேன்.

சென்னை "இந்து" பத்திரிகையில் சர்ப்பவனத்தைப் பற்றிய கட்டுரை வந்ததாகப் பலர் வியந்து பேசக் கேட்டிருக்கிறேன். எப்படியும் அந்த இடத்தை வாழ்நாளில் ஒரு நாள் பார்த்தால்தான் மனம் நிம்மதியடையும் போல் அன்றிருந்தது.

எதிர்பாராதவைகள் சம்பவிக்கும் போதுதான் கடவுள் இருக்கிறரென்ற எண்ணம் எழுகிறது. 1957ம் வருடம் நான் திருச்சியில் கல்லூரியில் படித்துக்கொண்டிருந்த காலம். ஒருநாள் சகமாணவர்கள் நான்குபேர்கள் உரையாடிக் கொண்டிருந்தோம், பேச்சு எங்கெங்கோ சுற்றி இறுதியில் பாம்புவிஷ சர்ச்சையில் வந்து நின்றது. அப்போது விஸ்வநாதன் என்னும் நண்பன் "சர்ப்பவனத்தை"ப் பற்றிக் குறிப்பிட்டார். பழைய ஆசை என்னை அறியாமலே கிளம்பிவிட்டது. எப்படியும் அந்தவனத்தைப் பார்த்து விடுவது என்று திட்டம் போட்டோம். இந்த இடம் திருச்சியிலிருந்து சற்றேறக் குறைய 14 மைல் தொலைவிலிருந்ததால் அடுத்த நாளே போய்ப் பார்ப்பது என முடிவு செய்து அதற்கான ஏற்பாட்டில் முனைந்து விட்டோம்.

திருச்சியிலிருந்து "மஞ்சத்திடல்" என்னும் இடத்திற்கு புகை வண்டியில்போய், அங்கிருந்து 3 மைல் நடந்தே செல்லவேண்டும். ஆசை உந்த வழிக்கஷ்டத்தை மறந்து சென்றோம். போகும் போதே ஏதோ ஒரு புதர்க்காட்டிற்குள் போவது போன்ற பிரமை தட்டிற்று. சிறிது தூரம்தான் நடந்திருப்போம் என் கூட வந்த நண்பர்கள் ஓட ஆரம்பித்துவிட்டார்கள். ஏன் நானும்தான் . அப்பப்பா! இப்போ நினைத்தாலும் உடல் சிலிர்க்கிறது. கலாட்டாவிற்குக் காரணம், அருகிலிருந்த புதர்மறைவிலிருந்து சில பாம்புகள் எங்கள் பாதையில்குறுக்கிட்டதுதான். ஒருவாறு சமாளித்துக் கொண்டு முன்னேறினோம். சிறிது தூரம் சென்றதும் ஒருசிறு குடிசை தூரத்தே தெரிந்தது. நடையை எட்டிப் போட்டோம். குடிசையருகில் வந்ததும் எமது சப்தநாடியும் ஒடுங்கிவிட்டது. அங்குள்ள மரநிழலில் சிறிதும்

பெரிதுமாக ... வாழைத் தடலைக் கிழித்துப் போட்டமாதிரி ஒரே பாம்புமயம்.

எங்கள் குரலரவம் கேட்டு பர்ணசாலைபோலிருந்த குடிசைக்குள்ளிருந்து ஒரு பையன் வந்து ஒன்றுங் கேட்காது உள்ளே அழைத்துச் சென்ருன். தயங்கியபடியே உள்ளே சென்ருேம். ஏறத்தாள 60 அல்லது 65 வயதுக் கிழவர் குடிசை மூலையிலிருந்த மாந்தோலில் அமர்ந்திருத்தார். அவர் கோலம் ஒரு தபசியை ஒத்திருந்தது.

உள்ளே சென்றதும் எங்களை ஏற இறங்கப் பார்த்த பெரியவர், "யாருக்கு அரவு தீண்டிவிட்டது?" என வினவினர். நாங்கள் எமது வணக்கத்தை தெரியப்படுத்திவிட்டு சர்ப்பவனத்தையும், முதியவரையும் காண ஆசைப்பட்டு வந்ததைத் தெரியப்படுத்தினேம். எங்களை ஆச்சரியத்தோடு பார்த்துவிட்டு அமரும்படி சொன்னர். எங்கள் கண்களையே நம்பமுடியவில்லை...எங்கள் வீடுகளில் சிலவற்றில் பூனைக்குட்டிகள் வளையவருவது போல அவர் பக்கத்தில் பல பாம்புகள்...இருவர் அமரும் இடத்தில் நாங்கள் நால்வரும் அமர்ந்தோம். பயத்தினுல் உடம்பே ஒடுங்கிவிட்டது.

எங்களுக்கு குளிர்ந்த நீர்மோர் வழங்கினன் சிறுவன், பிறகு நாங்கள் அவரைப்பற்றி விபரத்தைக் கேட்டோம்.

அவர் தன்னை "சாஸ்திரி" என அறிமுகப்படுத்தினர். அவரது படிப்பு முடிந்ததும் றெயில்வேயில் சேர்ந்து ஸ்டேசன் மாஸ்டராக தேர்வு பெற்ருர். பல ஊர்களிலும் சேவை செய்தபின் புதுக்கோட்டையின் அருகாமையிலுள்ள ஓர் கிராமத்தில் பணிபுரிந்துகொண்டிருந்தாராம். அப்போது தற்செயலாக விஷக்கடியைப் பற்றி ஒரு ஆங்கிலேயர் எழுதிய ஆராய்ச்சிக் கட்டுரையைப் படிக்கும் வாய்ப்புக் கிடைத்தது. அதிலிருந்து பாம்பு விஷத்தைப்பற்றிய ஆராய்ச்சியில் இவரும் ஈடுபட்டாராம். தாயாரும், இவருமே வசிக்கும் வீட்டில் ஒரே பச்சிலையாகவே இருக்குமாம். இதைப்பார்த்து இவரது தாயார் இவரைத்திட்டிக் கொண்டேயிருப்பாராம். காலம் ஓடிற்று... பச்சிலையின் தன்மையை பரீட்சித்தும் பார்க்கவே சந்தர்ப்பம் வாய்க்கவில்லை.

ஒருநாள் ஏதோ பச்சிலையை அரைத்தபடியே விட்டுவிட்டு வேலை நிமித்தம் வெளியே சென்றுவிட்டார்...பச்சிலைக்குழம்பிருந்த அம்மிக்கு மேலேயிருந்த பரணிலிருந்து கந்தல் துணிமூட்டையொன்று எப்படியோ அந்த பச்சிலைக்குழம்பின் மேல் விழுந்துவிட்டது. இதைப் பார்த்த அவரது தாயாருக்கு அதிக கோபம். விழுந்த கந்தல் துணிகளாலேயே அந்தக் குழம்பைத் துடைத்து வீட்டுக்குச் சற்றுத் தூரத்திலுள்ள புதர் மறைவில் எறிந்துவிட்டார்.

அலுவலகத்திலிருந்து திரும்பியவர் பச்சிலைக்குழம்பைக் காணுது, அதுமறைந்த மாயத்தைத் தாயாரிடமிருந்து அறிந்து அதைத்தேடி புறப்பட்டார். புதருக்குச் சமீபம் வந்ததும் ஏதோ சப்தம் கேட்பதை உணர்ந்து, அங்கு சென்று பார்த்த போது இரு நல்ல பாம்புகள் அந்தக் கந்தல் துணிப்பொதியின்மேல் வளைத்துப் படுத்திருப்பதைப் பார்த்து அஞ்சி வீடுதிரும்பிவிட்டார்...ஆசைமேலிட அடுத்தநாள் அதே இடத்திற்குச் சென்று பார்த்த போது அந்த இரு நாகங்களும் இறந்துகிடப்பதைக் கண்டார்.

இதைக்கண்ணுற்றதும் அவருக்கு ஒரே திகைப்பு! ஒரு தடியின் உதவியோடு அக்கந்தல் துணிப்பொதியை எடுத்து வந்து தாயாருக்குத் தெரியாது பத்திரப்படுத்தி வைத்தார். மூன்று நான்கு வருடங்கள் ஓடி மறைந்தன, பல ஊர்களில் வேலை பார்த்து சீர்காழிக்கருகில் ஒரு கிராமத்தில் வேலையாயிருந்த நாளிலே ஒரு நாள் இவரிருக்கும் கிராமத்திலுள்ள ஒரு குழந்தையை அரவு தீண்டிவிட்டது. இதையறிந்த இவர் தன்னிடமுள்ள பச்சிலை தோய்ந்த துணியைப் பரீட்சித்துப் பார்க்க ஆசைப்பட்டார். அதன்படியே செய்யவும் துணிந்தார். பலரும் கேலி செய்தனர். ஆயினும் மனம் தளராது, கடவுளை நினைத்துக் கொண்டே அக்கந்தல்துணியிலிருந்து ஒரு சிறு துண்டைக் கிழித்து பாம்புக்கடி வாயில் வைத்து அழுத்திக்கொண்டார். மயங்கிக்கிடந்த குழந்தை சில நிமிஷங்களில் கண் விழித்துக்கொண்டது. சாஸ்திரிக்கு ஒரே மகிழ்ச்சி. தன்னால் ஒரு உயிரைக் காப்பாற்ற முடிந்ததே என்று மகிழ்ந்தவர், ஏன் தன் வாழ்நாளை இதற்காகவே அர்ப்பணிக்கக் கூடாது என எண்ணினர். தாயார் இயற்கை எய்தியதும் தம் எண்ணத்தைச் செயலாக்க முனைந்தார்.

இவருடைய புகழ் பரவ ஆரமபித்தது. எத்தனையோ உயிர்களை ஆண்டவனருளால் காப்பாற்றினர். நாளடைவில் வேலையையும் உதறித் தள்ளிவிட்டு சர்ப்பவனமென்று இப்போ அழைக்கப்படும் இடத்திற்கு மாற்றினர்... தனது வாழ்க்கை வரலாற்றைக் கூறிக் கொண்டுவந்தவர், "இன்னும் தன்னைப்பற்றி ஏதா



வது தெரியவேண்டுமா என்ருர்.?"

நாங்கள் குடிசைக்குள் நுழையும்போதே ஒன்றைக் கவனித்திருந்தோம். அக்குடிசை வாசலில் ஒரு மரத்தில் சிறு சிறு துணித்துண்டுகள் கட்டியிருந்தன. இதைப்பற்றிக் கேட்டபோது அவர் தந்த பதிலின் சாரம்.

"சிலர் அருகிலிருந்தும், சிலர் பல மைல்களுக்கப்பாலிருந்தும் விஷமிறக்கவருகிருர்கள். அப்படி வரும்போது பச்சிலே தடவிய துணியில் ஒரு துண்டைக்கிழித்து கடிவாயில் வைத்து அழுத்தியவுடன் விஷமிறங்கிவிடும். பின் அந்தத்துணியை மரத்தில் முடிந்து விடுவேன். சமீபத்திலாஞல் கடித்தபாம்பு அந்தத்துணியைத் தேடிவந்துவிடும். தூர இடமாயிருந்தால் பாம்பு அந்த இடத்தில் இறந்துவிடும். இதற்குச்சாட்சி நீங்கள் இங்கும் சுற்றுடலிலும் பார்த்த பாம்புகளேயாகும். இந்தச் சர்ப்பங்கள் என்னுடைய உணவைப் பகிர்ந்து கொள்ளும், அல்லது தாமாகவே மேய்ந்துவிட்டு மாலே நான் செய்யும் நாகராஜன் பூஜைக்குவந்துவிடும். இங்கு நீங்கள் பார்த்த பாம்புகளெல்லாம் விஷமற்றவை. யாரையும் ஒன்றும் செய்யா"

மேலும் தனக்கு சிஷ்யஞக தாய்தந்தையற்ற அங்குள்ள சிறுவனேயே வைத்திருப்பதாகவும், அருகிலுள்ள கிராமத்திலுள்ள சிலதனவந்தர்கள் தனக்குத் தேவையான உணவுமுதலியன தருவதாகவும் கூறிஞர்.

நாங்கள் சென்ற தினம் யாரும் அவரைப் பார்க்கவராததால் எங்களோடு மனம் விட்டுப் பேசிக்கொண்டிருந்தார்.

நேரமோ எங்களே அறியாது ஓடிவிட்டது அவர் தந்த சத்துமாவுடனேயே அன்று எமது மதிய உணவை முடித்துக் கொண்டோம். மாலே மணி 3க்கு மேலாஞல் அங்கிருந்து மஞ்சத்திடல்வரை அதாவது 7½மைல் நடந்துதான் வரவேண்டும். அல்லது அந்தப் பாம்புக்குகூட்டத்தில் தான் படுக்கவேண்டும். அதற்கு எங்களுக்கு துணிவு எங்கே? எனவே அந்தப்பெரியவரை, பரோபகாரியை வணங்கிவிட்டு எங்களுக்கு விடை தருமாறு கேட்டோம். அவருக்கு என்னதோன்றியதோ, எங்களே சிறிது தள்ளியிருந்த இன்னுமொரு குடிசைக்கு அழைத்துப்போஞர். அங்கு ஒன்றுக்குமேலொன்ருக பல மண் பானேகள் அடுக்கப்பட்டிருந்தன. அங்கும் ஒரே பாம்புமயம். எங்களே அழைத்துப்போனவர் தனது நெடிய ஆசையைத் தெரிவித்தார். அதாவது நாகராஜனுக்கு ஒரு தேவாலயம் அமைக்க ஆசைப்படுவதாகவும், இதற்காக மக்கள் தனக்களிக்கும் பணம் முழுவதையும் பானேயுள் போட்டு வைப்பதாகவும், 108 பானேகள் நிறைவுபெற்றதும் கோவில் நிர்மாண


**பொங்கல் மலரில்**

**அரைகுறை அறிஞரின்**
**அதிசய ஆராய்ச்சி**

உங்கள் சிந்தனையைத் தூண்டுவதுடன் சிரிக்கவும் வைக்கும் நகைச்சுவைக் கட்டுரை கலேச்செல்வி பொங்கல் மலரில் வெளியாகின்றது.

வேலை ஆரம்பிக்க வேண்டுமெனவும் கூறினர். நாங்கள் சென்றபோது 13 பானைகளே நிறைந்திருந்தன. நாங்கள் சந்தித்தபோது அவருக்கு ஏறத்தாள 65 வயதிருக்கும் இன்னும் 95 குடமும் எப்போ நிரம்புமோ, அதுவரை மனிதர் உயிரோடிருப்பாரோ என்பதே எமது சந்தேகம். அவர் கூறினர் "இளைஞர்களே! உங்கள் சந்தேகம் எனக்குப் புரிகிறது. ஆனல் நான் ஆசைப்பட்டபடி 108 பானைகளும் நிறைந்து நாகராஜனுக்குக் கோவிலெழுப்பி கும்பாபிஷேகம் செய்து வைப்பேன். இதுபூர்த்தியாகும் வரை நான் இறக்க மாட்டேன். இப்படி எனது அந்தராத்மா கூறுவதை உணர்கிறேன். நீங்களும் இளைஞர்கள். எனவே நான் கோவிலெழுப்பிக் கும்பாபிஷேகம் செய்வதைக் கேள்விப்படுவீர்கள், சிலர் வந்து பங்கு பற்றவும் செய்வீர்கள்" என்ருர்.

முதியவரின் மனோதிடத்தை நாங்கள் வியந்தோம். எங்களால் இயன்றதைச் சிறுவனிடம் காணிக்கையாகச் செலுத்திவிட்டுப் பெரியவரை வணங்கி விடைபெற்றுக்கொண்டு புறப்பட்டோம்.

எப்போ அந்த உத்தமரின் அபிலாஷைப்படி கோவில் கட்டிக் கும்பாபிஷேகம் நடக்கும், அப்போ நானும் சென்று கலந்து கொள்ளலாமென்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன். எப்போ அப்பாக்கியம் கிட்டுமோ யாரறிவார்?


## தமிழ்மொழி
## மாதிரிகை வினுப்பத்திரங்கள்

G. C. E. வகுப்பு மாணவருக்கு உகந்தது.

36 வினுப்பத்திரங்கள் கொண்டது

வித்துவான்

ச. சி. ஞானப்பிரகாசம் அவர்கள் அமைத்தது.

**விலை ரூபா 1.25**

**ஆசீர்வாத அச்சகம் புத்தகசாலை,**

32, கண்டி வீதி, யாழ்ப்பாணம்



# முற்போக்கு இலக்கியம்

## மு. தளையசிங்கம்

"முற்போக்கு இலக்கியம்" பற்றிய இக் கருத்தரங்கின் முதலாவது கட்டுரையைச் சென்ற இதழில் கா. சிவத்தம்பி எழுதினர் மு. தளையசிங்கம் எழுதும் இந்த இரண்டாவது கட்டுரை அடுத்த இதழில் முடியும். இக்கருத்தரங்கைப் பாராட்டிப் பல எழுத்தாளர்களும் வாசகர்களும் எழுதியுள்ளனர் பாராட்டுடன் நின்றுவிடாது தமது கருத்துக்களையும் எழுதியனுப்பி இதில் கலந்து கொள்ளும்படி அனைவரையும் அழைக்கிறோம்.

விளம்பரங்களும் கூட்டுக்களும் முதலாளித்துவ அமைப்புக்குத்தான் அதிகம் பொருத்தமானவை. Cadyl கலந்த சோப், Solv-x கலந்த மை என்று வரும் விளம்பரங்கள் எல்லாம் விற்பனையையே நோக்கமாகக் கொண்டவை. Cartel களும் Trusts களும் அதே நோக்கத்தைக் கொண்ட கூட்டுக்கள்தான். தொழிற்சங்கங்களும் அதே அமைப்புக்குச் சொந்தமான ஒன்றுதான் - விற்பனையைவிட வாங்குவதுதான், அதாவது தன் உரிமைகளைப் பேரம்பேசி கொள்முதல் செய்வதுதான் - அதன் ஆரம்ப நோக்கமாய் இருந்தாலும் அதிகாரத்தைப் பெற்றபின் அதுவும் தன் கொள்கைகளை விற்கத்தொடங்கி விடும் - அதிக அதிகாரத்துடன், சர்வாதிகாரத்துடன்! விளம்பரங்கள் சரக்கின் பொய்மையையும் போலித் தன்மையையும் மறைக்கின்றன. கூட்டுக்கள் சிலசமயம் தனிப்பட்ட தயாரிப்பாளர்களின் பலவீனத்தையும் சிலசமயம் சர்வாதிகாரத்தையும் மறைக்கின்றன. இரண்டும் ஒரே அமைப்பின் இரு தோற்றங்கள். அதே அமைப்பு இலக்கியத்துக்குள் பிரவேசித்துவிட்டதை உணர்த்தும் சின்னங்கள்தான் ரஷ்யாவில் சோஷலிஸ யதார்த்தமும் (அரசே ஏக முதலாளியாகிவிட்ட அதி உச்ச நிலை. அதனால் ஏக சுலோகம்: சோஷலிஸ யதார்த்தம்.) இலங்கையில் முற்போக்கு எழுத்தாளர் சங்கமும் இந்தக் கட்டுரையின் தலைப்பான முற்போக்கு இலக்கியமும்.

முற்போக்கு இலக்கியம் என்றால் என்ன?

எனக்கு இந்த முற்போக்கு

என்ற அடைமொழியே பிடிக்கவில்லை. அது ஒரு திருகப்பட்ட அர்த்தத்தைத்தான் கொடுக்கிறது. மனிதனின் பிரச்சனைகளை மிக அக்கறையோடு அணுகும் கலைநிறைந்த இலக்கியங்கள் எல்லாம் முற்போக்கு இலக்கியங்கள்தான். இலக்கியத்தை முற்போக்கு இலக்கியம் பிற்போக்கு இலக்கியம் என்று பிரிக்கமுடியுமானால் முற்போக்கு இலக்கியத்தையும் அதிமுற்போக்கு இலக்கியம் அதி அதி முற்போக்கு இலக்கியம் என்று உலகத்தில் எத்தனை தரமான எழுத்தாளர்கள் இருக்கிறார்களோ அத்தனை பிரிவுகளாகப் பிரித்துக்கொண்டே போகலாமே? எனவே இலக்கியம் என்றாலே முற்போக்கு இலக்கியம் என்பதுதான் என் கருத்து. இலக்கியம் என்றால் முற்போக்கு இலக்கியம், முற்போக்கு இலக்கியம் என்றால் இலக்கியம் - அதுதான் நான் நினைப்பது. தரமற்றவற்றைஇலக்கியத்துக்கு உயர்த்தி பின்பு அவற்றை வேறுபடுத்த முயலும் போதுதான் முற்போக்கு இலக்கியம் என்ற பெயர் எழவேணடிய நிலை ஏற்படுகிறது, இது தரமற்ற இன்றைய எழுத்தாளர்கள் தங்கள் படைப்புகளின் தரமற்ற தன்மையை மறைப்பதற்காக, தாங்களாகவே ஒதுக்கப்பட்டு கீழே விழுந்துவிடும் வேறு தரமற்ற படைப்புக்களை இலக்கியங்களாக உயர்த்தி அவற்றோடு தங்கள் படைப்புக்களை ஒப்பிட்டு தங்கள் படைப்புக்கள் உயர்ந்தவை என்று காட்ட முயலும் ஒரு நிலை. உருவத்துக்கு முக்கியம் கொடுக்காமல், (கொடுக்க முடியாததால்) உள்ளடக்கத்துக்கு மட்டும் முக்கியத்துவம் கொடுக்கும் சில எழுத்தாளர்களும் இந்தப் பணிக்கு மிகவும் உதவுகிறார்கள். அதனால்தான் "முற்போக்கு இலக்கியம்" என்ற இந்தத் தலைப்பும் குறையை மறைக்கமுயலும் ஒருவகை விளம்பரம் என்று ஆரம்பத்தில் நான் குறிப்பிட்டேன்.

அப்படியென்றால் முற்போக்கு இலக்கியம் என்றால் என்ன என்ற கேள்வி இலக்கியம் என்றால் என்ன என்ற கேள்வியாக மாறிவிடுகிறது. இலக்கியம் என்றால் என்ன? அதைப் பற்றி ஆயிரக்கணக்கானோர் எழுதிவிட்டனர். இனியும் எழுதுவது வாசகர்களின் அறிவை அவமதிக்கும் அனாவசியமாகும். அத்துடன் Rigid ஆன Constitution எதிலும் எனக்கு நம்பிக்கையும் இல்லை. ஒன்றுமட்டும் சொல்லவிரும்புகிறேன். இலக்கியத்துக்கு உருவமும் வேண்டும் உள்ளடக்கமும் வேண்டும். அவை இலக்கியத்தின் இரு கால்கள். ஆனால் அந்த உருவமும் உள்ளடக்கமும் ஒவ்வொரு தனிப்பட்ட எழுத்தாளனின் சக்திக்கேற்ப விரியக்கூடியவை. புதுமைப்பித்தன் நம் சிறுகதைகளின் உள்ளடக்கத்துக்குமட்டும் ஓர் உச்சத்தைக் கொடுக்கவில்லை. அவரின் எழுத்தின்சக்தியாலும் நடையின் கவர்ச்சியாலும், கலைமிகுந்த கவர்ச்சியாலும், உருவத்துக்குமே ஓர் புது உச்சத்தைக் கொடுத்திருக்கிறார் என்பதுதான் என் எண்ணம். ஆனால் உருவமும் உள்ளடக்கமும் அவனவனின் சக்திக்கும் திறமைக்கும் அறிவுக்கும் ஏற்ப விரியக்கூடிய தனிப்பட்ட விஷயங்கள் என்றாலும் ஒவ்வொரு எழுத்தாளனும் எதிர்நோக்கவேண்டிய சில பொதுப்பிரச்சனைகளும் உண்

○ கனதனவான்கள்
○ கட்டிளங்காளைகள்
○ தொழிலாளர்கள்
○ முதலாளிகள்

அனைவரும்
ஆனந்தமாகப்
புகைப்பதற்கு





786 கல்கி பீடி

786 கல்கி பீடிகளையே

தெரிவு செய்கிறார்கள்.

திறம்பீடிப் புகையிலை,
பீடி இலை,
மொத்தமாகவும் சில்லறையாகவும்
எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்

## சி. சின்னத்துரை அன் பிறதர்,

39, K. K. S. வீதி
யாழ்ப்பாணம்

44, 3ம் குறுக்குத் தெரு,
கொழும்பு

தொழிற்சாலை:
118/12, ஆட்டுப்பட்டித் தெரு, கொழும்பு.

மைகளும் இருக்கின்றன. அவை அவனது சூழலாலும் காலக்கட்டத்தாலும் அதேசமயம் மனித வர்க்கத்துக்கே சொந்தமான, எல்லாக் காலக்கட்டத்துக்குமே செல்லுபடியான, பொது மனிதத் தன்மையாலும் நிர்ணயிக்கப்பட்டு எழுகின்றன. அந்தப் பொதுப்பிரச்சனைகளை தன் சக்திக்கும் அறிவுக்கும் ஏற்ப ஓர் எழுத்தாளன் அணுகும்போது அவனது தனித்தன்மையைக் காட்டும் உருவமும் உள்ளடக்கமும் கொண்ட இலக்கியங்கள் வெளிவருகின்றன. நான் ஓர் எழுத்தாளன். என் தனித்தன்மையை விளக்கும் உருவத்தையும் உள்ளடக்கத்தையும் கொண்ட இலக்கியத்தைத் தெரியவேண்டுமானால், இலக்கியத்துக்கு நான் கொடுக்கும் வரைவு இலக்கணத்தைப் புரியவேண்டுமானால், இனி நான் வெளியிடும் படைப்புகளைத் தான் படிக்கவேண்டும். ஆனால் என்னை இன்று எதிர்நோக்கும் பொதுப்பிரச்சனைகளும் உண்மைகளும் இருக்கின்றன. அவற்றைத் தான் மற்ற எழுத்தாளர்களும் எதிர்நோக்கிறார்கள் எதிர்நோக்கும் போது அவரவர் அறிவுக்கும் திறமைக்கும் ஏற்பத்தான் அவற்றைப் புரிந்துகொள்ளமுடியும். அவற்றை என் அறிவுக்கும் திறமைக்கும் ஏற்ப நான் எப்படிப் புரிந்துகொள்கிறேன் என்பதைக் காட்டுவது தான் இக்கட்டுரை. அதன் மூலம் வரைவு இலக்கணம் கொடுப்பதை விட இலக்கியத்தைப்பற்றி நான் என்ன நினைக்கிறேன் என்பதை அதிகமாகத் தெளிவுபடுத்தலாம் என்று நான் நினைக்கிறேன்.

என்னை எதிர்நோக்கும் பொதுப் பிரச்சனைகளும் உண்மைகளும் பலரகமானவை.

எல்லாவற்றுக்கும் முதலில் இதை எழுதப்போகும் எனக்கு ஓர் தடை ஏற்படுகிறது. நான் இப்போ சொல்லப்போவது இலங்கையை மையமாக வைத்தா அல்லது உலகத்தையே மையமாக வைத்தா?

இருபதாம் நூற்றாண்டின் மத்தியில் வாழ்ந்து கொண்டிருப்பதால் ஏற்படும் ஒரு தவிர்க்கமுடியாத நிலை அது. உலகத்தை மறந்து இலங்கையை நினைக்கமுடிவதில்லை. இலங்கையை மறந்து உலகத்தை நினைக்க முடிவதில்லை. அளவைமீறாத தேசியத்தை அடிப்படையாக வைத்து வளர்ந்துகொண்டிருக்கும் ஓர் சர்வதேசியப்போக்கு இக்கால அரசியல் நிலை. அது சரிவந்துவிட்டால் பழைய குறுகிய மனப்போக்கு, கொள்கைகள், சட்டதிட்டங்கள் என்பவை உடைபட்டுப்போகும் தளர்ச்சியும் அதனால் ஏற்படும் பரந்த முற்போக்கும் சுதந்திரமும் கிடைக்கும். அது பிழைத்துவிட்டால் பழைய தேசிய எல்லைகளுக்குள் உட்பட்ட அடிமைத்தனத்துக்குப் பதிலாக சர்வதேசிய அளவில் விரியும் அடிமைத்தனமோ அல்லது அழிவோ நம்மை மூழ்கிவிடும். இந்தியாவின் வடக்கு எல்லையில் இப்போ நான் இதை எழுதும்நேரத்தில் (ஒக்டோபர் மாதம் முப்பத்தியொன்று) முன்னதின் (அடிமைத்தனத்தின்) ஆபத்து பயமுறுத்திக்கொண்டு முன்னேறுகிறது. இங்கே உள்ள கொம்யூனிஸ்ட் கட்சி அதைப் பற்றி அவ்வளவு ஒன்றும் சொல்லாமல் இருப்பது ஐந்தாம்படைப் பயத்

தை அதிகரிக்கச் செய்கிறது. (பின்பு ஓர் அறிக்கை விடப்பட்டிருக்கிறது, இந்திய-சீன எல்லைப்போர் ஓர் சிறியவிசயம் என்றும் அதை விட்டுவிட்டுக் கியூபாப் பிரச்சனையைப் பற்றிக் கவலைப்படவேண்டும் என்றும் உபதேசம் செய்யும் பாணியில். சீனப் பொதுவுடமை அரசாங்கம் இந்தியாமீதும் நேரு மீதும் வசைமாரிபொழிந்து ஏகாதிபத்திய வாதிகள் என்று பிரச்சாரம் செய்தும் கியூபா சார்பில் பெரும் பிரம்மாண்டமான ஊர்வலங்கள் நடத்தியும் உள்நாட்டுமக்களை ஏமாற்றுவது இங்கே கவனிக்கத் தக்கது. இந்தப் பொதுவுடமை வாதிகளிடம் ஒரு தவருத Consistency இருக்கிறது. ரஷ்யாவில் குலாக்ஸை மறைத்துக்கொண்டு ஜேர்மன் யூதர்களைப் பற்றிப் பேசினர் ஒருகாலத்தில், பின்னர் ஹங்கேரியை மறைத்துக்கொண்டு சுயஸைப்பற்றிக் கத்தினுர்கள். இப்போ சீனவை மறைத்துக் கொண்டு கியூபாவைக் காட்ட முயல்கின்றனர். இப்படித் திரித்துக் கூறும் ஒரு கட்சியின் கீழிருந்து இலக்கியம் எழுதும் நிலையை ஒருக்கால் நினைத்துப் பாருங்கள். சீனவில் ஒரு எழுத்தாளன் இப்போ எப்படித் தன்னை ஒரு சரியான உலகநிலையில் நிறுத்திச் சிந்திக்கமுடியும்? சோஷலிஸ யதார்த்தம் என்பதும் ஒருபக்கத்தை மறைத்துக்கொண்டு ஒருபக்கத்தைக் காட்டும் வித்தைதான். அத்துடன் இந்தோ சீனயுத்தம் வேறு ஒரு உண்மையையும் காட்டுகிறது. இந்தியா பொருளாதார வளர்ச்சியோடு ஆன்மீக வளர்ச்சிக்கும் ஓர் உதாரணமாக நிற்கிறது. சீன வெறும் லோகாயத வளர்ச்சியை மட்டும்தான் குறிக்கிறது. லோகாயத வளர்ச்சி மனிதனை எந்தவகையிலும் வளர்க்காமல் பழைய கொலோனிஸ வாதியாகவே விட்டிருக்கிறது. அது ஒரு புதிய Ideology ன் தேவையைக் குறிக்கிறது. Spanish Civil Warல் பொதுவுடமை வாதிகளுக்காக நின்ற உலக அறிவாளி வர்க்கம் இந்த இந்தோ சீன யுத்தத்தில் அவர்களுக்கெதிராக நிற்கிறதென்ருல் அது ஒரு புதிய சகாப்தத்தின் பிறப்பைத்தான் குறிக்கிறது) அமெரிக்காவின் முற்றிய முதாளித்துவ வளர்ச்சி கியூபா சம்பந்தமாகக் கடைப்பிடிக்கும் பாஸிஸக் கொள்கை பின்னதின் (அழிவின்) ஆபத்துக்குக் கருக் கூட்டுகிறது. சரிவருமா, பிழைக்குமா என்ற பயங்கரப் பிரச்சனை கலந்த ஒரு தேசிய-சர்வதேசியப்போக்கு. அது இன்றைய போக்கு, அப்படி ஒரு போக்கைக் கொண்ட சரித்திரக் காலக் கட்டத்தில் காலை ஊன்றிக் கொண்டு எழுதும் எழுத்தாளன் அந்தப் போக்கைப் புறக்கணித்து நினைக்க முடியாது.

நான் இப்போ சொல்லப்போவது இலங்கையை மையமாக வைத்தா? உலகத்தை மையமாகவைத்தா? அப்படி ஒரு கேள்வி, நான் எழுதப்போவது அரசியலைப்பற்றியல்ல, இலக்கியத்தைப்பற்றித்தான் என்று திருப்பித் திருப்பிச் சொல்லிக் கொண்டால்கூட தொடர்ந்து நடையாய் நிற்கிறது. காரணம் இக்கால எழுத்தாளனுக்கு, அவன் இலங்கையில் இருந்தால் என்ன ரிம்புக்டுவில் இருந்தால் என்ன-அதுதான் சூழல், குறிஞ்சி முல்லை என்று வளர்ந்த நம் இலக்கியம் இன்று சர்வதேசம்

உலகம் என்ற நிலைக்கு வளர வேண்டிய நிலைக்கு வந்துவிட்டது. பொன்னுத்துரையைப்பற்றி நினைக்கும் நான் அதேசமயம் ரஷ்ஷியாவைப்பற்றியும் சோஸலிஸ யாதார்த்தத்தைப்பற்றியும் நினைக்கின்றேன், அது இன்றையதவிர்க்க முடியாத நிலை, என்றாலும் மற்றவர்களைப்பற்றி நினைக்கும்போது தன்னை மறந்துவிடக்கூடாது. அப்படி மறந்துவிட்டால் தனித்தன்மை என்பது ஏற்படுவதற்கு வழி இருக்காது. தனித்தன்மை! இடையில் வேறு ஒன்றைச் சொல்ல வேண்டியிருக்கிறது.

தனித்தன்மை-அது மிகமுக்கியம். மற்றவர்களைப்பார்க்கும்போது என்முன்னே எழும் பொதுப்பிரச்சனைகளை அணுகும்போது என்னை நான் இழந்துவிட நான் விரும்புவதில்லை. என்னை நான் மறந்துவிடக்கூடாது. விளம்பரங்களும் கூட்டுக்களும் எனக்குப் பிடிக்காதவை. என் திறமை, அதில் எனக்குள்ள நம்பிக்கை, அத்துடன் அவை எல்லாவற்றையும்விட நான் போற்றிக் காப்பாற்ற விரும்பும் என் தனித்தன்மை என்பவற்றுக்குவிளம்பரங்களும் கூட்டுக்களும் நேர் எதிரானவை. நான் தனித்தன்மையில் அதிக பற்றுள்ளவன். கட்சியின் கட்டுப்பாடுகளுக்கும் சமூகத்தின் சட்டதிட்டங்களுக்கும் எப்போதும் தலைசாய்க்கவிரும்பாதவன். தி.மு.க. அமைப்புக்குள் இயங்க வேண்டிய நிலை கம்பனுக்கு ஏற்பட்டிருந்தால் அப்படி ஒரு காப்பியத்தை அவனால் பாடியிருக்கமுடியாது. கொம்யூனிஸ்ட் கட்சியின் சட்ட திட்டங்களுக்குள் ஜெயகாந்தனும் நம் முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் பிற்போக்கு நோக்கங்களுக்குள் எஸ். பொன்னுத்துரையும் எழ முடியாமல் வீழ்ந்திருந்தால் இன்று அவர்கள் எழுதும் தரமான கதைகளை அவர்களால் எழுதமுடிந்திருக்காது. ஒவ்வொரு எழுத்தாளனும் நான் வைத்திருக்கவிரும்பும் அதே தனித்தன்மையை வைத்திருக்க வேண்டும் என்று விரும்புபவன் நான். இப்படி இப்படித்தான் இருக்க வேண்டும் என்று சட்டம் வகுப்பவர்கள் கட்சியோடும் அரசாங்கத்தோடும் செத்துப் போகட்டும், இலக்கியத்துக்குள் வரவேண்டாம். ஒவ்வொரு எழுத்தாளனும் ஓர் மேதாவி. தனக்கேற்ற சட்டதிட்டங்களை அவன் தானே அமைத்துக் கொள்ளவேண்டும். அப்போது தான் தனித்தன்மை காப்பாற்றப் படும். அந்தத் தனித்தன்மை அவனது இலக்கியங்களில் பிரதிபலிக்கப்படும். அதே நிலைதான் ஒரு நாட்டின் இலக்கியத்துக்கும். ஒவ்வொரு நாட்டின் இலக்கியமும் உலக இலக்கியத்தோடு அடிப்படைத் தன்மையில், தரத்தில் ஒத்திருந்தாலும் தன் நாட்டு இலக்கியத்தின் தனித்தன்மை விளங்குவதாகவும் இருக்கவேண்டும். எனவே உலகத்தையும் சர்வதேசியத்தையும் நினைக்கும்போது இலங்கையையும் மறந்துவிடக்கூடாது. அதிதேசியம் எப்படிக்கூடாதோ அப்படி அதி சர்வதேசியமும் கூடாது. (ஆனால் இலங்கையில்பிரதேசம் என்ற பெயரில் இரண்டுங்கெட்ட ஒரு மருட்சி ஏற்பட்டிருக்கிறது. அதைப்பின்பு விளக்கவேண்டும். அது தனித்தன்மைக்கு குழிவெட்டிவிடும். எனவே

உலகப்போக்கை நினைவில் வைத்துக்கொண்டு எழுதும்போது இலங்கையையும் மறந்துவிடக்கூடாது. இக்கால நிலை தேசிய-சர்வதேசிய நிலையேதான். ஒன்று முற்றாக மறைந்து மற்றது முற்றாகத் திரிந்து வளர்ந்துவிட்ட Orwell லின் 1948ன் நிலையோ அல்லது Huxlcyன் A. F. 774ன் நிலையோ (Brave New World) இன்னும் (எப்படித்தான் பயமுறுத்தினாலும், வ்ரப்போவதாக) நல்லகாலம் வரவில்லை.

எனக்கு இலங்கையைப் பற்றி நினைக்கும்போது முதலில் நினைவுக்கு வருவது நம் முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் நிலையே தான். ஒருவேளை இக்கட்டுரையின் தலைப்பைப் பார்த்துவிட்டு நம் முற்போக்கு எழுத்தாளர் சங்கம் கருதுவதைத்தான் அது குறிப்பிடுகிறதா என்றுகூட சிலர் நினைக்கக் கூடும். ஏன், அதைச் சார்ந்த எழுத்தாளர்கள் இலங்கையில் தாங்கள் தான் ஏதோ முற்போக்கு இலக்கியம் படைக்கிறார்கள் என்று பிரசாரம் செய்வதைப் பார்க்கும்போது இப்படி ஒரு கட்டுரைக்கு—கடைசி அதன் தலைப்புக்காவது-ஏற்கனவே இவர்கள் Patent Right வாங்கிவிட்டவர்கள் போலக்கூடத் தெரியும். எனவே இங்கு அவர்களைப் பற்றியும் ஒன்றிரண்டு சொல்லுவது அவசியமாகிறது. முற்போற்குச் சங்கத்திலுள்ள இரண்டொருதனிப்பட்ட எழுத்தாளர்கள் ஓரளவுக்குப் பறுவாய் இல்லை என்று சொல்லக்கூடியதாக எழுதுபவர்களாய் இருக்கிறார்கள். ஆனால் அது சங்கத்தின் தன்மையை உயர்த்துவதாகவோ அதிலுள்ளவர்களின் பொதுக் கொள்கைகளையும் அபிலாஷைகளையும் சிறப்பிப்பதாகவோ இல்லை. முற்போக்கு எழுத்தாளர் சங்கம் நான் இங்குசொல்ல நினைப்பவற்றை வைத்துப் பார்க்கும்போது வெறும் பிற்போக்குச் சங்கமாகவே தெரியும். முற்போக்கு எழுத்தாளர் சங்கம் என்ற கூட்டும் முற்போக்கு என்ற விளம்பரமும் நான் முன்பு சொன்ன தனிப்பட்ட எழுத்தாளர்களின் பலவீனத்தையும் எழுதப்படும் சரக்கின் போலித்தன்மையையும் குறுகிய நோக்கையும் மறைக்கும் சாதனங்களே. இலக்கிய வளர்ச்சி தனிப்பட்ட எழுத்தாளர்களின் திறமையிலும் தனித்தன்மையிலுந்தான் தங்கியிருக்கிறது. கட்சிரீதியாகவோ தொழிற்சங்கமுறைப்படியோ சாதித்துவிடக்கூடிய பொருளாதார விஷயங்களல்ல இலக்கிய சிருஷ்டிகள். அதோடு கட்சிரீதியில் விற்பனைசெய்யப்படும் கொள்கைகள் அரசியல்அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு உதவக்கூடினாலும் இலக்கிய வளர்ச்சியைக் கைப்பற்ற உதவா. முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் தோல்வியும் குறுகிய பிற்போக்குத் தன்மையும் எனவே தவிர்க்கமுடியாதவையாகிவிடுகின்றன. அத்தனை பேர்கள் கூடி எழுதியும் அத்தனை பேர்கள் கூடிச் சங்கம் நடத்தியும் இலங்கையில் அவர்கள் ஒரு தனி மனிதன் சாதித்ததைவிட அதிகமாகவோ புதிதாகவோ சாதித்து விடவில்லை. தன் கதைத்தொகுதியான தோணிக்கு வ. அ. இராசரத்தினம் எழுதிய முன்னுரையின் சில வசனங்கள் இங்கே மிகவும் பொருந்தும்.

—இத்தொகுதியைப் படிப்பவர்கள் பூதந்தேவனர்தொட்டு வளர்ந்து வரும் ஈழத்து இலக்கிய மரபிற்குக் குறிப்பிட்ட ஓர் காலக்கட்டத்தில் விமர்சகர்கள் ஏதேதோ பெயர் சூட்டி ஆரவாரிக்கிருர்கள் என்று எண்ணிஞல் அதற்கு நான் பொறுப்பாளியாகமாட்டேன்.—

பரிசுகள் வெல்வது வேறு விஷயம். அவற்ருல் இலக்கிய வளர்ச்சியில் புதிய உச்சங்களைத் தொட்டு விட்டோம் என்ற அர்த்தமில்லை. செ.கணேசலிங்கம் ஜெயகாந்தனின் கதை ஒன்றைக் கட்சிக்கொள்கையில் வைத்து ஆராய்ந்து குறைகள் கண்டதுவும் அந்த எழுத்தாளரின் புதிய கதை ஒன்றைப்பற்றி வேறு ஒரு முற்போக்கு எழுத்தாளர் கொள்கை காரணமாய் குறைபட்டுக் கொண்டார், என்று தேனருவியில் வந்த செய்தியும் முற்போக்கு எழுத்தாளர்சங்கத்தின்பிற்போக்குத் தன்மையை விளக்கப் போதுமானவை. மணிக்கொடிகுழு, எழுத்துக் குழு என்பவை இலக்கிய முயற்சிகள், சோதனைகள். இலக்கியத்தைப்புதிய உச்சத்துக்கு உயர்த்தத் தனிப்பட்ட எழுத்தாளர்களின் கொள்கைகளை, தனித்தன்மையை வரையறுக்காது நடத்தும் கூட்டு முயற்சிகளை, தனிப்பட்ட எழுத்தாளர்களின் சுதந்திரத்தையும் தனித்தன்மையையும் மிகக் குறுகிய அளவில் வரையறுத்து இலக்கியத்தைக் கட்சிக்கொள்கைகளுக்குக்கீழ் கொண்டுவந்து இலக்கியத்தை ஒரு தனித்துறையாகப் பாவியாமல் அதை ஒரு சாதனமாகக் கையாண்டு இரண்டாந்தர இடத்துக்கு அதை இறக்கும் அரசியல் கட்சி சம்பந்தப்பட்ட இலக்கியச்சங்கங்களின் முயற்சிகளோடு மாருட்டம் செய்து விடக்கூடாது. அவை வேறு, இவை வேறு. பின்னதைச் சேர்ந்தது நம் முற்போக்கு எழுத்தாளர் சங்கம். மனித உணர்ச்சிகள் தன்மைகள் எல்லாம் மார்க்ஸிஸத்தைவிட விசாலமானது என்பதை அது உணராது. அதனல் ஜெயகாந்தனின் கதைகளை அப்படி ஓர் அளவுகோல் கொண்டு ஆராயமுயல்கிறது.. இலக்கியம் வழி காட்டும் தெருப்பலகைகள் அல்ல என்று எஸ். பொன்னுத்துரை கூறியதாக ஞாபகம். அது உண்மை. ஆனல் நம் முற்போக்கு எழுத்தாளர்கள் அப்படி ஒரு நினைவில்தான் ஒரு பலகையைப் போட்டுக் கொண்டு நிற்கிருர்கள்-''முற்போக்கு இலக்கியம்''. பாவம்,அவர்களுக்குத் தெரியவில்லை அவர்கள் நிற்கும் பாதை பழையதாகிவிட்டதென்பது. பஸ் அந்தப் பக்கம் இப்போ போவதில்லை. அது புதிய திசையில் புதிய பாதையில் ஓடுகிறது. அதைப்புரியாமல் அவர்கள் கத்துகிருர்கள். கூட்டுக்கும் விளம்பரத்துக்கும் அதாவது கட்சிக்கும் அதன் பீத்தல்களுக்கும் சொந்தமான குறை அது. காலத்தின் வளர்ச்சியையும் மாற்றத்தையும் அவை புரிந்துகொள்வதில்லை. அதனுல்தான் காலத்தை தங்களோடேயே சதா நிற்க வேண்டுமென்று அவை கத்துகின்றன. அதனுல் தான் பெரும்பாலும் கட்சிப் பெட்டிக்குள் வளரும் எழுத்தாளன் வாடி வெளுறிச் செத்துவிடுகிருன். காலத்தின் போக்கை உணர்ந்து வேண்டிய திசையில் விரும்பியமாதிரி வேரை ஓடவிட்டு சூரியனின்

ஒளியை முற்றாகப் பயன்படுத்தி பெரும் விருச்சிகமாக வளர அவனால் முடிவதில்லை.

எனவே இலக்கியம் என்பதன் மூலம் கட்சி இலக்கியத்தை நான் கருதவில்லை, கட்சி இலக்கியத்தை நான் அடியோடு வெறுக்கிறேன். கலை கலைக்காக என்ற வாதம். பிழையானது. ஆனால் அதைவிடப்பிழை. யானது கலை கட்சிக்காக என்ற வாதம். முன்னதில் கொஞ்சமாவது தனித்தன்மைக்கும் புதிய தத்துவங்கள் பிறப்பதற்கும் வசதி இருந்தது. பின்னதில் அந்த வசதி கொஞ்சமும் இல்லை., ஒருமைப்பாடு, ஒருமைப்பாடு! ஒரே ராகம்! எல்லாப் பிரச்சனையையும் தீர்ப்பதற்கு ஒரே Formula கலை மக்களுக்காக-நானும் கைதூக்குகிறேன். ஆனால் மக்கள் என்பதைக் கட்சியாக மாற்றுவதை நான் அடியோடு எதிர்க்கிறேன். கட்சி என்பது மக்களாக விரியவேண்டும். ஆனால் அது இன்றைய அரசியல் கட்சிகளால் முடியாது. வேறு எந்தக்கட்சிகளாலும் முடியாதது. காரணம் மனிதத் தன்மைகள், எண்ணங்கள் மன எழுச்சிகள் என்பவற்றை ஒரு Formula வைக்கொண்டு அளக்க முடியாது. அவை விசாலமானவை மிகச்சிக்கலானவை. ஒவவொரு கட்சியும் அந்தச் சிக்கலான பரந்த அளவில் ஒரு சிறு பின்னந்தான். ஒரு பின்னம். அது முதலாளித்துவ ஜனநாயகத்திலும் சரி தொழிலாளித்துவ சர்வாதிகாரத்திலும் சரி ஒன்றேதான்.

எனக்குப் பொது மக்களைப் பிடிக்காது என்பதல்ல அர்த்தம். பொதுமக்களைப்பற்றிய என் அபிப்பிராயம் வேறு என்பதுதான் உண்மை. மக்களைத் தனித்துக் கோடுகள் தெரியாத நீர்த்திரளாக நான் நினைக்கவில்லை. அப்படி ஒருமக்கள்-திரள் தத்துவம்கட்சியும் சர்வாதிகாரியும் வெட்டும் வாய்க்காலைத் தவிர வேறுவழியில் மக்களை ஓடவிடுவதில்லை. மக்களில் எனக்குநம்பிக்கை இருக்கிறதென்றால் ஒவ்வொரு மனிதனிலும் எனக்கு நம்பிக்கை இருக்கிறதென்பதுதான் அர்த்தம். ஒவ்வொரு மனிதனும் ஒரு சிறு நீர்த் துளியல்ல, மற்றவர்களோடு கலந்து சேர்ந்து தன் தனித்தன்மையை இழந்து ஓட்டத்தையும் வேகத்தையும் ஏற்படுத்தாவிட்டால்

## கல்கியின் நாவல்

"கல்கி"யின் முதல் நாவல் தியாகபூமி. இன்றைக்கும் எனக்கு நினைவிருக்கிறது; தியாக பூமியைப் படித்துவிட்டுத்தான் வெள்ளிக்கிழமை இரவு படுப்பது என்று பிடிவாதமாகக் காத்திருக்கும்விரதம் கொள்ளும்படி செய்த முதல் எழுத்தாளர் கல்கி தான். தமிழ் நாடெங்கும், தமிழ் பேசும் மக்கள் வாழுமிடமெங்கும்,தியாக பூமி அன்று அடைந்த செல்வாக்கு, வேறெந்த தொடர் கதைக்கும் கிட்டியிருப்பதாகச் சொல்ல முடியாது. விகடன் அச்சுஇயந்திரங்கள் தமிழ் மக்கள் ஆவலைத் தீர்க்க ஓய்ச்சலின்றி வேலை செய்து திணறிப் போயின. தமிழ் நாட்டில் தொடர் கதைக்கு ஒரு மதிப்பும், அசையாத ஸ்தானமும் சம்பாதித்துக் கொடுத்தவர் கல்கி"

—எஸ். எஸ். வாசன்.

காய்ந்து ஆவியாய்ச் செத்துவிடுவதற்கு! ஒவ்வொரு துளியும் ஓர் ஓட்டத்தை ஏற்படுத்தக் கூடியது! முழு ஓட்டத்தையுமே மாற்றக்கூடியது! அந்த அதிசயத் துளி தனி மனிதன்! எனவே நான் பொதுத் தன்மையை, பொதுமுன்னேற்றத்தை விரும்புகிறேன் என்றால் அது தனித்தன்மையும் தனி முன்னேற்றமும் வளர்வதினால் ஏற்படும் பொதுமுன்னேற்றமே. மற்றவர்களின் தனித்தன்மையை விழுங்கி அடக்கி வளரும் ஒரு தனித்தன்மை எப்படி சர்வாதிகாரமாகிவிடுமோ அப்படி ஒவ்வொருவனின் தனித் தன்மையும் விழுங்கி வளரும் பொதுத் தன்மையும் சர்வாதிகாரமாகி விடுகிறது. அதனால்தான் கட்சி இலக்கியம் கூடாது என்று நான் கருதுவது. மக்களின் பரந்த வாழ்க்கைக்கு கட்சி தன்னிடமிருக்கும் ஒரு முழத்துணியில் இலக்கியம் தைக்கிறது. அதனால் அந்த ஒரு முழத்துணிக்கேற்ப வாழ்க்கையையே வெட்டி ஒதுக்கி விடுகிறது. அதற்குப்பின் இலக்கியம் என்பது வாழ்க்கையின் ஒரு சிறு பின்னத்தின் பிரதிபலிப்பாகவே ஆகிவிடுகிறது. அதோடு இலக்கியப்போக்கில் ஒருமைப்பாடு யந்திரப்பிடியாக விழுந்துவிடுகிறது. அதன்பின் ஒரு ஸ்தம்பிதம். அதற்குப்பின் இலக்கியம் மக்களுக்காகத்தான் படைக்கப்பட்டாலும் அது முற்போக்கு இலக்கியமாக மாறாமல் பின்தங்கிவிட்ட பிற்போக்கு இலக்கியமாக அதாவது இலக்கியமற்றதாக மாறிவிடுகிறது. அதற்குப்பின் கட்சியின் பிரச்சாரம் எல்லாம் வெறும் விளம்பரமாகிவிடுகிறது, கட்சியின் பிற்போக்குத் தன்மையையும் குறுகிய நோக்கையும் மறைக்கும் விளம்பரம். நம் ஈழத்து முற்போக்கு எழுத்தாளர்களினது நிலையும் அதே நிலைதான்.

(தொடரும்)


## கல்கியின் சிறுகதை

இப்போது நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாகத் தமிழ்ப் பத்திரிகைகள் வெளியாகிக் கொண்டிருக்கின்றன. அவற்றில் அதிகப் பக்கங்களை நிரப்புவன சிறுகதைகள் தாம். ஆனால் இக்கதைகள் வாழ்க்கையை உண்மையாகப் படம் பிடிப்பனவாயில்லை. கலைஞனின் கைவண்ணமோ, இலக்கிய இனிமையோ இதயத்தை ஈர்த்துச் செல்லும் காந்த சக்தியோ அவற்றில் கிடையா. கலை ஒரு வியாபாரமாக மாறிவருவதால் எந்த விதத்திலும் பணம் சேர்ப்பதையே தொழிலாகக் கொண்ட எழுத்தாளர்கள் பணத்துக்காகத்தங்கள் கற்பனைகளைப் பாழாக்கி விடுகின்றனர். கலை, ஒருவரின் பிழைப்பாக அமையுமிடத்து, அவரது சிருஷ்டிகள் மலைபோற் குவிந்து, பழைய சங்கதிகளே மீண்டும் மீண்டும் இடம்பெறுகின்றன. கல்கியின் சிறுகதைகள் இதற்கு விதிவிலக்கானவை. அவருடைய சிறுகதைகள் என்றுமே புத்தம் புதிய உருவம் பெற்றுக் கன்னற்பாகாகி விடுகின்றன.

—இராஜ. அரியரத்தினம்.

# மல்லிகைப் பூ

ஜன்னலுக்கு வெளியே சுவரோடுஒட்டியிருந்தமல்லிகைப் பந்தலில் தாவி ஓடிய இருஅணில்களின் "கீச் கீச்" ஒலியில் அவன் விழித்துக் கொண்டான். மார்கழி மாதத்து வைகறைப் பனியில் குழித்தெழுந்த பூரிப்பில் பூத்துக் குலுங்கிய மல்லிகைப் பந்தலினின்றும் சிதறிய மணம் மூக்கைத் துளைத்தெடுத்தது. அந்த இன்பவேதனையை அனுபவித்த வண்ணம் போர்வையை விலக்கிவிட்டுக் கட்டிலில் எழுந்து உட்கார்ந்தான்.



கிழக்கே இருளின்போர்வையைக் கிழித்து ஒளிஇலேசாகவிரிந்திருந்தது. ஜன்னலுக்கூடாக பந்தலின் மேற்பரப்பில் தெரிந்த மல்லிகைப்பூக்கள் அவனுக்குஎதையோ நினைவூட்டின. நெஞ்சில் இனந்தெரியாத உணர்ச்சி மேலோங்கி நின்றது. நினைவில் சியாமளா எழுந்து நின்றாள்.

"சியாமளா"

அ;வன் உதடுகள் ஒருதரம் அசைந்தன.

அவளுக்கு என் நினைவு இருக்குமா? உள்மனம் கேட்டது.

அறைக்குள் நுளைந்து ஆடியகாலைக்காற்று சுவரில் மாட்டியிருந்த கலண்டரை ஆட்டிவிட்டு ஓடியது.

"ரவி அண்ணா!" அறைக்குள் நுழைந்த பானு தேனீர்க் கோப்பையை அவனெதிரே நீட்டினாள்.

"ஏனண்ணா அப்படிப் பார்க்கிறீர்கள்?"

இரா. இளஞ்செழியன்

"இல்லை ஐந்து வருடங்களுக்குப் பிறகல்லவா உன்னைப் பார்க்கின்றேன். ஒரேயடியாக வளர்ந்திருக்கிறாயே? பானு தானோ அல்லது வேறுயாராகிலுமோ என்று...!

"போங்களண்ணா!" நாணிக் கொண்டு ஓடினாள் பானு.

காலிக்கோப்பையை மேசைமேல் வைத்து விட்டு முகத்தில் அரும்பியிருந்த வியர்வைத்துளிகளைத் துடைத்துக் கொண்டான்.

விழிகள் மீண்டும் ஜன்னலை ஊடுருவின. சியாமளாவின் வதனம் எழுந்து நின்றது. நிலவுசிரித்த முகத்தில் வில்போல் வளைந்து காதுவரை நீண்ட புருவங்கள். அதன் கீழ்விளையாடும் இரண்டுவிழிகள். முறுவலே உருவமான சிவந்த உதடுகள். அவள் அவனைப் பார்க்கின்றாள். அவைவிழிகளா? இல்லை நட்சத்திரங்களா?

கண்கள் கூசின ரவிக்கு. கண்களை மூடிக்கொண்டான்.

காட்சிகள் சுழன்றன.

"சியாமளா!"

பறித்த மல்லிகைப் பூக்களை குனிந்து தட்டில் வைத்து விட்டு நிமிர்ந்தவள் திடுக்கிட்டுத் திரும்பினாள். சாட்டை போன்ற ஒற்றைப் பின்னல் அவள் கொடி போன்ற இடையை ஒருமுறை சுற்றி வந்து விட்டுத் தன் நிலையடைந்தது.

யன்னலருகே சிரித்தபடி நின்றான் ரவி.

" அழைத்தீர்களா? " தாளஓசை போல் இருந்தது அவள் குரல், விழிகள் வீட்டைச் சுற்றுமுற்றும் மருட்சியுடன் நோக்கின.

"பயப்பிடாதே சியாமளா! அம்மாவும் பானுவும் கோயிலுக்குப் போயிருக்கிறார்கள்."

"ஏன் அழைத்தீர்கள்"

"கிட்டேவா சொல்கிறேன்"

"ஸ்...யாராவது பார்த்தால் என்ன சொல்லுவார்கள்? இங்கேயே நிற்கிறேன், சொல்லுங்கள்."

"சியாமளா! உனக்குத் தினம் மல்லிகைப்பூதேவைப்படுவது போல் எனக்கும் ஒருபூ தேவைப்படுகிறது, கொடுப்பாயா?"

"பூவா? என்ன பூ? வீட்டில் இருந்தால் கொண்டுவந்து தருகிறேன்."

"சியாமளா! எனக்குத் தேவைப்படுவது உனது அன்...பு... ஊ...!"

குங்குமத்தைக் குழைத்துக் கன்னங்களில் பூசியது போலிருந்தது சியாமளவுக்கு.

"ரவி! நீங்கள் பொல்லாதவர்."

இலக்கிய ஆர்வமுடைய இளைஞர் இளஞ்செழியன் இலங்கை மலைநாட்டில் வாழ்கின்றார். அவருடைய முதலாவது சிறுகதையை மகிழ்ச்சியுடன் வெளியிடுகின்றோம். இளைஞன் ஒருவரின் ஏக்கம் நிறைந்த வாழ்வை இனிமையாகச் சித்தரிக்கின்றார். கதையில்.

கீழுதட்டைப் பற்களால் கடித்த வண்ணம் அவனை நோக்கினாள். அந்த விழிகளில் தெரிவது அவன் கேட்ட அன்புதானோ?

ஃ ஃ ஃ

சந்தனத்தை அரைத்த கல்லில் குங்குமத்தைப் பூசியது போன்ற ஒரு மாலை.

"பானு"!

படித்துக் கொண்டிருந்த சஞ்சிகையை வைத்துவிட்டு வாசலுக்கு விரைந்தான் ரவி. அங்கு சியாமளா நின்றிருந்தாள்.

"பானு இல்லையா ரவி?"

"இல்லை, அம்மாவுடன் எங்கோ போய்விட்டாள். ஏன் வெளியே நிற்கிறாய்?"

"இல்லை" என்று தயங்கியவள் உள்ளே வந்தாள். "பானு வந்ததும் இந்தப் புத்தகத்தை அவளிடம் கொடுங்கள். நான்பிறகு வருகிறேன்"

"சியாமளா!"

"ம்..."

"அன்று நான்கேட்ட பூ?" ஆவல் தொனித்தது ரவியின் குரலில்

"அதை அன்றைக்கே கொடுத்து விட்டேனே ரவி!" அவள் குரலில் வெட்கம் இழையோடியது.

"நிச்சயமாகவா?" அவள் கரங்களைப் பற்றிக் கொண்டான் ரவி.

"ரவி! என்னை ஏமாற்றிவிடமாட்டீர்களே"

"சியாமளா! உதட்டளவில் சொல்லவில்லை. மாசற்ற உள்ளத்தாலேயே சொல்கிறேன், என்னை நிச்சயமாக நம்பு சியாமளா!"

"நான் பாக்கியசாலி ரவி!" இதயத்தில் ஊற்றெடுத்த ஆனந்தம் அவள் உதட்டில் வந்து நிற்கிறது.

ஃ ஃ ஃ

அன்று வெள்ளிக்கிழமை. மைம்மல் பொழுது.

பிள்ளையார் கோவில் சாயங்காலப் பூஜை முடிந்தது. அர்ச்சனைத் தட்டத்துடன். வெளியே வந்தாள் சியாமளா. வில்வமரத்தருகே ரவி நிற்பதைக் கண்டதும் அவனருகில் சென்றாள்.

"ரவி!"

"நான் நாளைக்குக் கொழும்பிற்குப் போகிறேன், சியாமளா!"

"ரவி!"

"கனடாவிற்குப் போய்ப் படிப்பதற்கு ஸ்கலஷிப் கிடைத்திருக்கிறது. இதைச் சொல்வதற்கு ஒரு கிழமையாக உன்னைத் தேடினேன். நீதான் வீட்டுக்குப் பக்கமே வரவில்லையே?"

"அப்பாவுக்கு நம் உறவு தெரிந்து விட்டது ரவி!"

என்ன?"

"கோவிலுக்குத் தவிர வேறெங்கும் போகாதே என்று சொல்லிவிட்டார் ரவி!"

சில கணங்களை மௌனம் ஆக்கிரமித்துக் கொண்டது.

"நீ எப்படியும் கோவிலுக்கு வருவாய் என்று தெரிந்துதான், உன்னிடம்விடை பெறவந்தேன் சியாமளா!"

"என்னை மறந்து விடமாட்டீர்

களே ரவி! - விம்மினுள் அவள்.

''சியாமளா! என் நெஞ்சத்தின் உருவத்தை அழிப்பதற்கு நான் என்ன அவ்வளவு கயவனு? எனக்காக ஐந்தாண்டுகள் உன்னல் காத்திருக்கமுடியுமா சியாமளா?"

''ஐந்தாண்டுகளா...? உங்களுக்காகக் காலமெல்லாம் காத்திருப்பேன் ரவி!''

மேலே அவளால் பேச முடியவில்லை. அவள் விழிக்குடங்களில் கண்ணீர் தழும்பி வழிந்தது.

∴ ∴ ∴

''ரவியண்ணு!"

திடுக்கிட்டுக் கண்களைத் திறந்தான் ரவி. காட்சிகள் மறைந்தன.

பானு கட்டிலுக்கருகில் நின்ருள்.

''என்னண்ணு பிறகும் தூங்கிவிட்டீர்களா? குளித்து விட்டு வாருங்கள் சாப்பிட"

கட்டிலை விட்டு இறங்கிய ரவி ஜன்னலருகே போய் நின்று கொண்டான். மல்லிகைப் பந்தலின் கீழ் ஏராளமான பூக்கள் இறைந்து கிடந்தன.

''பானு!''

''அண்ணு!''

''சியாமளா சுகமாக இருக்கிருளா?''

பாவம் அண்ணு அவள். மூன்று வருஷத்திற்கு முன்புதான் அவள் கணவன் இறந்துபோனுன். மிகவும் கஷ்டப்படுகிருள்."

''என்ன அவள் கணவன் இறந்து போனுனு? அப்படியானுல் அவளுக்குக் கல்யாணம் நடந்ததா?"

''நீங்கள் அமெரிக்காவுக்குப் போய் சில மாதங்களில் அவளுக்கு கல்யாணம் நடந்தது. அந்தக் கல்யாணத்தில் அவளுக்கு விருப்பமே கிடையாது. இங்குவந்து என்னைக் கட்டிக்கொண்டு அழுதாள், பரிதாபமாக இருந்தது அவளைப் பார்க்க"

சூன்யத்தை வெறித்தபடி நோக்கினுன் ரவி.

''சியாமளாவின் தந்தை மாடு முட்டி இன்ருே நாளையோ என்றிருந்தார். தான் இறக்குமுன் மகளின் கல்யாணத்தைப் பார்க்க ஆசைப்பட்டார். அதனுல் இந்தக் கல்யாணம் நடந்தது. பாவம் அவள். மணம் முடித்து மூன்ருவது மாதம் தந்தையை இழந்தாள். ஒன்பதாவது மாதத்தில் கணவனை இழந்தாள்''. பானுவுக்கே அழுகை வந்தது.

''பானு... ஊ" சமையலறையிலிருந்து அம்மா கூப்பிட்டாள்.

கண்களைத் துடைத்த வண்ணம் போனுள் பானு.

ஜன்னல் கம்பிகளைப் பிடித்த வண்ணம் சிலையென நின்ருன் ரவி. இதயத்தில் அவன் உருவாக்கியிருந்த சிலை உடைந்து ரத்தம் வழிவது போலிருந்தது பந்தலின் கீழ் இறைந்து கிடந்த மல்லிகைப் பூக்கள் ஒவ்வொன்றும் வெள்ளைச்சேலையுடுத்த சியாமளாவாக அவனுக்குக் காட்சியளித்தன. அண்ணுந்து சூன்யத்தை நோக்கிய அவன் விழிகளில் பெருகிய கண்ணீர் கன்னங்கள் வழியே உருண்டன.




**திமிலைத்துமிலன்**

'கலைச்செல்வி ஆசிரியரின் கடிதம் கிடைத்ததும்" அதற்கென்ன; கரும்புதின்னக் கூலியா வேண்டும்; தாராளமாக எழுதியனுப்புகிறேன்' என சுமார் இரண்டு மாதத்துக்கு முதல் எழுதிய பதில் இப்போதான் ஞாபகம் வருகிறது.– அதுவும் கலைச் செல்வி கலைவிழா மலரைப் பார்த்த பிறகுதான்.

"அடேயப்பா! நேரமில்லையென்று புழுகுவதிலே பலே பேர்வழி போலிருக்கிறதே!" என்று நீங்கள் நினைக்கலாம். உண்மைதான். காலம் முழுக்கஆதிக்கம் செலுத்தஉள்ளூர்ப்பாடசாலை என்ன. நமதுபாட்டன் பூட்டன் சொத்தா?பதினெட்டாம் நூற்றாண்டை இப்போதும் நினைவுபடுத்தும்வள்ளங்களிலே ஏறி அக்கரைப்பட்டு ஆசிரியனாகிவிட்ட பாவத்துக்கு அழுது தீர்த்து மீண்டும் ஏறிஇறங்க 'கருக்க'லாகிவிடும் போது 'நேரமில்லை, என்று வேறாகப் பட்டை தீட்ட வேண்டியதில்லைத்தான்.

கவிதை ஒன்றும் நமது வயிறை நிரப்பவில்லை. ஆசிரியத் தொழில்தான் சோறு போடுகிறது. கவிதை மனத்தை நிரப்புகிறது. ஏதாவது ஒரு பத்திரிகை கவிதைக்கும் பணம் கொடுக்க முன்வந்தவுடன் திடுதிப்பென்று எவரின் பெயரையாவது திருடி கவிஞர்களாகிவிடும் பிரபல எழுத்தாளர் சிலருக்கு வேண்டுமானால் கவிதை கஜானாவை நிரப்பலாம், நமது வயிறு கவிதையால் நிரம்பாது. ஆகவே வயிற்றைப் பார்த்தபிறகுதான் மனத்தைப் பார்க்கவேண்டியிருக்கிறது. | செத்தாரைப்போல சில காலம் கிடந்து விடவேண்டும் என உறுதி பூண்டாலும் எழுதாமலிருக்க முடிவதில்லை. இது ஒரு பைத்தியம். ஒரு வெறி.

கலைச்செல்வியாசிரியர் 'என்னைக் கவர்ந்த என் குழந்தை" என்பதைப்பற்றி எழுதுமாறு ஒருதாய்க்குக்கட்டளை போட்டிருந்தால் அந்த அன்னை எப்படித் திக்குமுக்காடுவாளோ அதே நிலைதான் கவிஞர்களுக்கும் ஏற்படலாம். முதற் பெற்ற குழந்தைமீது தாய்க்கு ஒருவேளை கூடிய அன்பும் கவர்ச்சியும் ஏற்படலாம். பெரும்பாலும் கவிஞனுக்கும் இதேநிலை ஏற்படும் என்று கூறுவதற்கில்லை.

நான் தொழில்புரியும் கிராமத்திலே விசித்திரமான மணவினைகள் நிகழ்வதுண்டு, ஒரு நாட்டுக்கூத்தோ அல்லது கோயிலிலே விமரிசையான திருவிழாவோ நிகழ்ந்ததானால் அன்றிரவு ஏழோ எட்டோ திரும

ணங்கள் நிகழ்ந்திருக்கும் எனத் திட்டமாகக் கூறலாம்.

"கந்தண்ணன்ட பொடியன் சின்னப் பிள்ளையிட ஊட்டுக்கு ராவு பூந்துட்டானுங்கா" என்பது போன்ற (யதார்த்தவாதிகளின் பாஷையில் மணவளச்) சம்பாஷணையொன்றை வீதியிலே கேட்க முடிந்ததானல்; அன்றிரவு அந்தவீட்டுக்குக் கிராமவிதானை வந்திருப்பார்; கந்தனின் மகனுக்கும் சின்னப்பிள்ளையின் மகளுக்கும் கலத்திலே போட்டிருப்பார்கள்' என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். அதேநேரத்தில், பட்டணத்து நாகரிக வாழ்க்கையிலே நிகழ்ந்துவிடும் ஒழுக்கத் தவறுகளை நாம் பெரும்பாலும் காணமுடியாதென்பதையும் மனதில் வைக்க வேண்டும். இளம் பெண்களோடு உறவாடிவிட்டுக் கம்பி நீட்டிவிட எத்தனித்த சிலபட்டணத்து வாலிபர்களும் இந்தக்கிராமத்தில் மாட்டிக்கொண்டு விழிக்கிருர்கள் என்பதையும் நாம் தெரிந்து கொள்ள வேண்டும்.



சென்னை குழந்தை எழுத்தாளர் சங்கம் நடாத்திய கவிதைப் போட்டியில் பரிசு பெற்ற ஈழத்துக் கவிஞர் திமிலைத்துமிலன், ஆனந்தவிகடன், கல்கி, கலைமகள், தென்றல் முதலிய இந்தியப் பத்திரிகைகளிலும் இலங்கையிலுள்ள எல்லாப் பத்திரிகைகளிலும் அடிக்கடி கவிதைகள் எழுதிவருமிவர் ஒரு பயிற்றப்பட்ட தமிழாசிரியர். நல்ல ஓவியர்.

'இந்த ஊட்டுக்க பூர்வதையும்' சங்ககாலத்துக் காதல் ஒழுக்கங்களோடு சேர்த்துக் கொண்டால் என்னஎன்றுகூட நான் நினைத்ததுண்டு. சங்ககாலக் கைக்கிளை பெருந்திணை ஆகிய ஒழுக்கங்களின் போது நிகழும் வரைகடாவுதலும் மடலேறுதலும் போன்றதே "ஊட்டுக்கபூர்தலாகிய" ஒழுக்கம் என நாம் எடுத்துக்கொள்ளலாம்.

பழந்தமிழ்க் காதலர்களை நாம் இங்கே காணமுடியும். நீர் அள்ளச் செல்வாள் அந்தக் கன்னிப்பெண், வயலுக்குச் சென்றுதிரும்பும் காளை ஒருத்தனது கண்ணுக்கு அவள் இலக்காவாள். நான்குவிழிகள் இணைநோக்குநோக்கும். இந்தஇணை நோக்குகள் நாட்டுக் கூத்து அரங்கேற்றத்திலும் கொம்பு விளையாட்டிலும் கோயில் திருவிழாக்களிலும் நிகழும். இதை உணர்ந்த பெற்ருேர் முறைப்படி 'கேட்டுப் போவார்கள்' (மணம் பேசுவார்கள்) பெரும்பாலும் பேச்சுவார்த்தைகளின் முடிவில்மணம் மங்களமாக நிறைவேறும். பெண்ணின் பெற்ருேர் மணமகனை வெறுக்கும் போதும்; மணப் பெண்ணே விரும்பாத போதும் தான் நான் மேலே குறிப்பிட்ட "ஊட்டுக்கபூர்தல் நிகழ்கிறது. துணிவுள்ள வாலிபன் எப்போது நாட்டுக் கூத்து, அரங்கேற்றமோ, கோயில்திரு விழாவோ வருமென 'இறவு' பார்த்திருப்பான். அவனது கருத்தைக் கவர்ந்த அந்தக்கன்னி இருக்கும் வீட்டினுள் அவன் புகுந்துவிட்டானுல், யாராலும் எதுவும் செய்முடியாது. விதானை வருவார்; திருமணம் வழைமைபோல நிகழ்ந்துவிடும்.

நான்கண்டு கேட்ட இந்தக்

கிராமத்துக் காதல் ஒழுக்கம் எனது கவிதை ஒன்றுக்குக் கருவாயமைந்தது.

சித்திரைப் புத்தாண்டு கிராம மக்களுக்கு ஒரு பொன் நாள். பூமித் தாய் தந்த பொற்குவைகளை வீட்டு வாசலில் பட்டறைகளிலே சேமித்து அழகு பார்க்கும் பொன்நாள். ஏழை எழியவர் எவர்க்குமே நன்நாள்.

ஆகா; யாழைக்— குழலை— அமுதை வெல்லும் கிள்ளை மொழிகள் —மழலை கொட்டுகின்றன.

அதோ! வளைகுலுங்க, தனது வீட்டுமுற்றத்தை அழகு செய்கிருள் ஒருகன்னி. சித்திரைப் புதுநாளிலும் கதிரவனுக்குப் பொங்கலடுதல் சிலரது வீட்டு வழக்கம் போலும். புன்னகையோடே புதிய மணலை அழகாகப் பரப்பி அவள் கோலமிடுகிருள். கோலமிடும்போது எதை நினைத்துக் கொண்டாளோ? அந்தக் கண்ணுடிக் கதுப்பில் நாணம் ஏன் குங்குமத்தைக்கொட்ட வேண்டும்?

சிரிக்கின்ருள் கண்ணுடிக்
  கதுப்பில் நாணச்
செவ்வந்தி பூக்குதடா!
  சிந்தும் சோளப்
பொரிபூத்த எயிற்ருளைப்
  பொங்கல் செய்த
புல்லரிப்புத் தின்னுதடா!
  அத்தான் கையை!
விரிப்பானே தரிப்பானே?
  ஆனல் நெஞ்சம்,
விம்முதடா பூரிப்பால்
  இறுக்கும் கச்சு
வரிப்புக்குள் அடங்காது
  பருவம் பொங்கி
வழிய அவள் வருகின்ருள்.
  மகிழ்ச்சிப் பொங்கல்.

''பொங்கலுக்கு வரவேண்டும்
  என்று போட்ட
புதிய மடல் கிடைத்ததடி
  வந்தால் சேலைத்
தொங்கலுக்குள் மறைப்பாயோ?
  மாமி ஊதும்
சொல்லம்பால் துளைப்பாயோ?
  வேண்டாம், மற்றத்
திங்களுக்குள் வீடொன்று
  கிடைக்கும் மெத்தச்
சீக்கிரத்தில் இருபேரும்...
  சரியா? கண்ணே!
இங்கிதமா யிருந்திடடி''
  என்று அத்தான்
எழுதினனே மனப்பொங்கல்
  இதற்குத்தானே?

பட்டணத்துக் காதலனுக்கு வீட்டுப்பிரச்சனை தானே பெரிது! இவள் ஒருவேளை பட்டணத்தான் யாரை யாவது?...... அவன்தான் ஒருவேளை கடிதம் போட்டிருக்கிருனே? சே, சே, அப்படியொன்றுமில்லை. கிராமப் பாடசாலையைத்தவிர பட்டணப் பக்கம் அவள் எட்டிப்பார்த்ததே கிடையாதே!

அப்படியா?அப்படியானல் அவள் தாயும் தந்தையும் ஏன் இப்படி மண்டையை உடைத்துக் கொள்ள வேண்டும்?

'இதற்குத்தான் நான் சொன்னேன்'
  என்ருள் தங்கம்.
''என்ன அது?" கேட்கின்ருன்
  வேலன், ''நாலு
சதத்துக்கு வழியில்ல,
  நமக்கேன் இந்தத்
தகாதபுது ஆசையெல்லாம்?''
  என்று இன்னும்
பிதற்றுகிருள். இது என்ன
  புதுமைப் பொங்கல்?

பேசாமல் நிற்கின்ருன்
வேலன் "நீங்க
முதற்பெற்ற குமாரத்தி..."
"அவளுக்கென்ன?"
'முத்தையன் கடதாசி
எழுதிஞனும்!"

"எழுதியது அவர் தானே!
உனக்கேன் இந்த
எரிச்சலடி?" எனக்கேட்டான்
வேலன. மூளை
அழுகித்தான் போனதுவா?
நமக்கும் அந்த
ஆட்களுக்கும் சரிவருமா?"
என்ருள் தங்கம்.
"கழுதை எனக்கேனிந்தப்
புத்தி?" என்று
கத்தியது வேலன்தான்
கதவிடுக்கால்
முழுவதையும் கேட்கின்ருள்
பொன்னி. மெல்ல
மூச்சின்றி நழுவுகிருள்
பின்புறத்தால்.

நழுவுகிருள் என்ன இது
நாம் நினைக்க
நடக்கிறது இங்கொன்று!
அடடா அந்த
விழுதுள்ள ஆலின்கீழ்
பருவமுல்லை.
விரிகிறது வண்டொன்று
சுற்றி வந்து
தழுவமுதல் ஏதேதோ
ஜாலம் காட்டித்
தனவலைக்கு இழுக்கிறது.
இளமை உந்தக்
கொழுகொம்பிற் படர்கிறது
கொடியைச் சுற்றிக்
கொள்கிறது கொழுகொம்பு
கொள்ளை ஆசை!

கட்டான முகைநாணிக்
கசங்கி ஏதோ
கணநேரக் குதுகுதுப்பில்
கனியமின்னும்
பட்டான மலர்க்கொத்திற்
பாரமேறிப்
பளுவேற்றிச் சூடாக்கப்
படபடக்கும்
வட்டத்து விழிசோர
இதழ்ப் பரப்பில்
மதுவெல்லாம் வற்றிவிட
மற்றும் எங்கோ
கட்டற்றுப் புதுவெள்ளப்
பாய்ச்சல் நீந்திக்
கலக்கிறது குளத்தோடு
களிக் கலக்கம்.

முத்துக்கள் தேடுவதில்
இன்பவேட்டை!
முடிவினிலே பொங்குவது
கண்ணீர் இங்கோ
நத்தைக்குப் பொறுப்பான
வேலன் தங்கம்
நடுவினிலே குதித்ததனுல்
கலங்கி அத்தான்
பித்துத்தான் பிடித்தவனுய்
நிமிர்ந்தான். ஆனுல்
பேசுதற்கு என்ன இனி?
விதானை வந்தார்
அத்தனையும் சரியாச்சு.
ஜல்! ஜல்! என்ன?
அத்தானுக் கவள்தானே
ஆசைப் பொங்கல்!

கவிதையிலே பிரமாதமான கற்பனையோ, பிரமாதமான இயற்கை வர்ணனையோ; பிரமாதமான உவமை உருவங்களோ காணக் கிடைக்கவில்லை. ஏன் உயர்ந்த மொழிநடைகூட இல்லைத்தான். சாதாரண மெல்லிய பேச்சுவழக்கு நடையிலே கவிதை

செல்கிறது. ஆனல் இன்று தலை தூக்கியிருக்கும் புதியவிழிப்புக்குத்தக வாழ்க்கையோடு இணைந்து நிற்கும் ஒரு தனித்த இனிமை வரிக்கு வரி தென்படுவதாக நான்உணர்கிறேன். இன்றைய உரை நடை ஆட்சியை யே கவிதையிலும் புகுத்தி கதை கூறும் பாங்கை எனது கவிதை கூறும் கதை சிலவற்றிலே கை யாண்டு வெற்றி கண்டிருக்கிறேன். அவற்றிலும் ஒருபடி உயர்ந்த உள் ளுறை உவமம் எனக்கே உரித்தான தனித்தன்மையோடு இதிலே மிளி ருவதாக நினைக்கிறேன். இத்தோடு கிராமியத் தமிழ்மணக்கும் கலைப்பண் பையொட்டிய எளிய இனிய சொல் லாட்சி மிகச் சாதாரண மக்களையே கவரும் வண்ணம் அமைந்திருப்ப தாக எனக்குப் படுகிறது. முதிராத ஒரு இளந்தன்மையோடு நெஞ்சைத் தொட்டுக் கிளுகிளுப்பூட்டும் ஒரு நளினச் சுவை வரிக்கு வரியில்லை- சொல்லுக்குச் சொல் அமைந்திருப் பது தென்படுகிறது. சில பகுதிகள்

## கல்கியின் நகைச்சுவை

இலங்கையில் உள்ள சிங்கள வர்கள் நாள்தோறும் குளிப்பது அருமை. இதை எவ்வாருவது தெரிவிக்க வேண்டும் என்று விரும்பிய கல்கி ஒரு கட்டுரை யினிடையே பின்வருமாறு எழு தினர்: 'இலங்கை எங்கும் குளங் கள் ஏராளமாக இருக்கின்றன. இவற்றிலிருந்து பழங்காலத்தில் சிங்களவர்கள் நாள்தோறும் குளி க்கும் பழக்கம் உடையவர்களாக இருந்தார்கள் என்று தெரிகிறது.'

—சோமலெ

## நகைச்சுவை!

கலைச்செல்வியில் வெளியிடுவ தற்கு, வாசகர்களிடமிருந்து நகைச்சுவைத் துணுக்குகளை எதிர்பார்க்கின்ருேம். படங்களையும் சேர்த்து அனுப்ப விரும்புவோர் 'இந்தியன் இங்க்' கினல் தெளி வாக வரைந்து அனுப்ப வேண டும் சிறந்த துணுக்குகளுக்குச் சன்மானம் உண்டு.

குளுமையான ஒரு இனிய உணர்வை ஒவ்வொரு மனத்திலும் ஏற்படுத்த லாம். இதைத்தவிர பொதுவாக ஒரு இனம்புரியாத இதைய நிறைவு கவி தையை வாசித்து முடித்தவுடன் எவ ருக்கும் தென்படலாம். கவிதையி னூடே ஒரு மெல்லிய இழையில் நகைச்சுவை நிழலிட்டுச் செல்வது ரசனையை இன்னுமொருபடி உயர்த் துவதாகப் படுகிறது.

'விழுதுள்ள ஆலின் கீழ் பருவ முல்லை'... என்பதிலிருந்து 'களிக் கலக்கம்' என்பது வரையுள்ள வரி களின் பொருள் வெளிப்பாட்டை இன்றைய யதார்த்த வாதிகள் உன் னித்து நோக்கத் தவறினும் வாழ் க்கையின் மறைவான பச்சைத் தன் மையை ஆபாச நாற்றமின்றிக் கலை மணக்கக் கையாண்டு வாசகர் முன் படைக்கும் வண்ணத்தைக் கண்டு கொள்வார்கள் என நம்புகிறேன். இதற்கு மேலும் புழுக எதுவுமில்லை.

இருக்கும் என்ற உறுதியைக் கொடுத்தவர் நேருஜி. உதட்டளவில் நில்லாது உண்மையாகவே ஒற்றுமையை நிலைநாட்ட முயலும் நேருஜிக்கு இலங்கையின் ஒற்றுமை பற்றிப் பேச நிச்சயம் உரிமை உண்டு.

எ. ஸி. சல்மா, சின்னக்கிண்ணியா.

கே: என் சிநேகிதி பிறமதத்தைச் சேர்ந்த ஒருவரைக் காதலிக்கிருள். அவர்களுடைய நட்பு நீடித்துக்கொண்டே போகின்றது. ஆனால் குடும்பத்தவர்கள் சம்மதிக்க மாட்டார்கள். என்ன செய்ய வேண்டும்?

ப: உண்மையான காதல், சாதி, மத, இன வேறுபாடுகளைக் கடந்தது. சிநேகிதியின் வாழ்வு சிறப்பாக அமைய வேண்டுமானுல், குடும்பத்தவர்கள் விட்டுக் கொடுக்கத்தான் வேண்டும். இது சாத்தியமில்லையானுல் கிநேகிதி தியாகம் செய்யவேண்டும் - குடும்பத்தவர்களின் தொடர்பை அல்லது காதலை!

யோகா—விக்னேஸ்வரா கரவெட்டி

கே: ஒருமதிப்பிற்குரிய நல்லாசிரியரின் பண்புகள் யாவை?

ப: நயமான சொற்களினுல் நல்லறிவைப் புகட்டவேண்டும். தவறிழைப்போரைத் தரும நெறியில் தண்டிக்க வேண்டும். ஒவ்வொரு மாணவனின் உண்மையான திறமையையும் அறிந்து அந்தத் திறமை வளர, மலர, வழி வகுக்க வேண்டும். மாணவர்கள் மாடுகளோ, கழுதைகளோ, அல்ல, மனிதக் குஞ்சுகள் என்பதை உணர்ந்து, அவர்கள் முன்னேற வழி வகுக்க வேண்டும்; அவர்களுக்கு முன்மாதிரியாக வாழ வேண்டும். ஆனுல் இப்படிப்பட்ட நல்லாசிரியர்கள் இன்று எங்கே இருக்கிருர்கள்...?



R. V. மார்க்கண்டு, புங்குடுதீவு.

கே: சிறுகதை எழுத்தாளர் "தீவான்" அவர்களின் எதிர்காலம் எப்படி இருக்கும்?

ப: முன்பொரு தடவைதான் சொன்னேனே, அவருடைய கவிதைகள் என்னைக்கவர்ந்த அளவிற்குச் சிறுகதைகள் கவரவில்லையென்று! "குருட்டுச் சிலை" என்ற கதைக்கு "கலைச்செல்வி"யின் பாராட்டுப் பத்திரம் இப்போது கிடைத்திருக்கின்றது. இன்னும் சில நல்ல கதைகள் வெளிவந்தால் தான், எதிர்காலத்தைப் பற்றிக் கூற முடியும்!

வே. ந. அருட்பிரகாசம், வியாபாரி மூலை.

கே: எனக்குப் பேனு நண்பர்கள் தேவை. "கலைச்செல்வி" ரசிக வாசகர்களின் ஆதரவு கிடைக்குமா?

ப: இப்படியான ஒரு பகுதியை ஆரம்பித்துத்தான் "கலைச்செல்வி" யின் விற்பனையைப்பெருக்க வேண்டும் என்ற அவசியம் இன்னும் ஏற்படவில்லை. வேறு ஏதாவது பத்திரிகைக்கு எழுதிப்பாருங்கள்!

த. தங்கராசா, நேரியகுளம்.

கே: விழிகளின் ஒளியை இழந்தாலும், வாழ்க்கையின் ஒளியையுமா இழந்து விடவேண்டும்?

ப: வேண்டாமே! தன்னம்பிக்கையும் மானத்துடன் வாழ்வேன்

என்ற மனத்திட்பமும் இருந்தால் நன்ருக, மற்றையோர் போற்றும் படி வாழ்ந்துவிடலாம். ஹெலன் கெல்லர் என்ற பெண்மணிக்குக் கண்கள் தெரியா; காதுகள் கேளா. என்ருலும் அவருடைய தன்னல மற்ற சேவையும் அபார திறமையும் அவரை உலகப் பிரசித்தி பெறச் செய்துவிட்டன. யாழ்ப்பாணத்து நீர்வேலியில் தியாகராசா என்ற கலேஞர் இருக்கின்ருர். அவருக்குக் கண்பார்வை இல்லே. ஆனல் அவருடைய இசைத்திறமையை இன்று பல்லாயிரக்கணக்காேனர் பாராட்டுகின்ருர்களே!

செல்வி. எம். எஸ். ஏ. மெரினு, கம்பளே.

கே: தான் காதலிக்காத ஒரு ஆடவன் தன்னே உளமார மனதார விரும்புகிருன்; தன்னே நினேந்து நினேந்து நாளெல்லாம் உருகுகின்ருன் என்பதை அறிந்த ஒரு பெண் என்ன செய்வாள்?

ப: அவள் தந்திரசாலி என்ருல், அந்த ஆணின் பலவீனத்தைப் பயன்படுத்திப் பல உதவிகளேப் பெற்றுவிட்டு, முடிவில் அவனேக் கைவிட்டு விடுவாள். அகம்பாவம் பிடித்தவள் என்ருல் அநாவசிய சண்டைக்குப் போய் அவனேப் பற்றிச் சந்தி சிரிக்க வைப்பாள்; நல்லவள் என்ருல் அவன்மீது அனுதாபம் செலுத்துவாள். இந்த அனுதாபம் நாளடைவில் காதலாக மாறி விடவும்கூடும்.

கே. சிவகௌரி, கண்டி.

கே: உலகம் ஏன் உருண்டையாக இருக்கிறது?

ப: சுற்றுவதற்கு வசதியாக!

வ. தேவராசன், கொள்ளுப்பிட்டி.

கே: கேள்வி-பதில் பகுதியில் உங்களுடைய படத்தை வெளியிட்டாலென்ன?

ப: நானென்ன, வேறு யாரோ எழுதுவதை என் பெயரில் வெளியிடுகின்றேனு, 'நான்தான் எழுதுகிறேன், நான்தான் எழுதுகிறேன், என்று படத்தைப் போட்டுச் சமாளிப்பதற்கு?

வண். நாகராசன், யாழ்ப்பாணம்.

கே: யாழ்ப்பாணத்திலுள்ள சில கொம்யூனிஸ்டுகள் மொஸ்கோவில் கோயில் இருக்கிறதென்று சொல்கின்ருர்களே?

ப: மொஸ்கோவாவது, கோயிலாவது! இப்போது நுளம்புக்கடி அதிகமல்லவா? அவர்கள் மொஸ்கிட்டோ கோயில் என்றது உங்கள் காதில் மொஸ்கோவில் கோயில் என்று விழுந்திருக்கலாம்!

என். வைகுந்தநாதன், வல்வெட்டி

கே: என்ன மிஸ்டர்! உமது மனேவி எனக்குக் காதல் கடிதம் எழுதியிருக்கிருளே!


**கலேச்செல்வி**

சந்தா விபரம்

ஆண்டுச் சந்தா ரூபா 4.
தனிப்பிரதி சதம் 30

விபரங்களுக்கு :

பாலன் வெளியீட்டு நிலேயம்
செட்டிகுளம்.

ப: இப்படி ஒரு எக்கச்சக்கமான கேள்வியைக் கேட்டு "என் மனைவிக்கு எழுதத் தெரியாது" என்ற உண்மையைப் பகிரங்கமாக ஒப்புக் கொள்ள வேண்டிய நிர்ப்பந்தத்தை ஏற்படுத்திவிட்டீரே! உம் தலையில் இடிவிழ!

A. குறைஸ்சியா, முல்லைத்தீவு.

கே: நான் ஒருவர் மேல் ஆசை கொண்டு அவரை விரும்புகின்றேன். அவரும் என்னை விரும்புகின்ருரா என்பதை அறிய என்ன செய்யவேண்டும்?

ப: தங்களுக்கு எதையும் தாங்கும் இதயம் வேண்டும்; உதையைத் தாங்கும் உடம்பும் வேண்டும். இவைகள் இருந்தால் கண்களால் பேசியும் பார்க்கலாம்; கடிதத்தை எழுதியும் பார்க்கலாம்.

எஸ். குமாரசுவாமி, காங்கேசன் துறை.

கே: இலங்கையில் கவிதையின் எதிர்காலம் எப்படி இருக்கும்?

ப: தரமான கவிஞர்கள் என்று இலங்கை-இந்திய வாசகர்களாலும் விமர்சகர்களாலும் ஏற்கனவே ஒப்புக் கொள்ளப்பட்ட இலங்கைக் கவிஞர்கள் பட்டியலில் இப்போது புதிதாக இரு இளைஞர்கள் - ச. வே. பஞ்சாட்சரம், பா. சத்தியசீலன் - சேர்ந்துள்ளார்கள். ஆகவே கவிதையின் எதிர்காலம் எழிலுடன் இருக்கும் என்று சொல்லவா வேண்டும்!

அருள். செல்வராசா, வெள்ளவத்தை.

கே: இலங்கையின் கல்வி மந்திரிப் பதவி ஒரு தமிழருக்கே என்று தீர்மானித்தால், அந்தப் பதவிக்கு தகுதியானவர் யார்?

கலைச்செல்வி
**பொங்கல் மலரில்**
**இலக்கிய**
**மணி மண்டபம்**
இடம்பெறுகின்றது.
படிக்கத் தவருதீர்கள்!

ப: தகுதியும் திறமையும் கல்வி விஷயங்களில் அதிகஈடுபாடுமுடைய நால்வர் இருக்கின்ருர்கள். திரு. ஹன்டி பேரின்பநாயகம், திரு. சு. இராசரத்தினம், திரு. கு. நேசையா, திரு. க. ச. அருணந்தி ஆகிய இந் நால்வருள் ஒருவரைக் கல்வி மந்திரியாக்கலாம்.

மல்லிகா, சிவலிங்கம், பதுளை.

கே: அண்ணு, "கலைச்செல்வி"யில் எங்களைப் போன்ற சிறுமியருக்கு ஏற்ற விதமான விஷயங்களை ஏன் வெளியிடுவதில்லை? பதுளையில் வாங்குவதும் கஷ்டமாயிருக்கின்றதே!

ப: "கலைச்செல்வி" பொங்கல் மலரில் இந்தக் குறை தீர்ந்துவிடும். உங்களைப் போன்றவர்களுக்காக ஒரு விறுவிறுப்பான தொடர்கதை பொங்கல்மலரில் தொடங்குகின்றது. உடனே உங்கள் அப்பாவிடமோ அண்ணுவிடமோ சொல்லிச் சந்தாவை அனுப்பச் சொல்லுங்கள். "கலைச்செல்வி"யை ஒழுங்காகப் படித்துச் சுவைக்கலாம்.

---

**தாண்டவக்கோன்**
மே/பா கலைச்செல்வி
பாலன் வெளியீடு
செட்டிகுளம்.

# நாடகவிழா

இலங்கை கலைக் கழகம்

இந்த இருபதாம் நூற்றுண்டில் நாடகக் கலை பிரமிக்கத்தக்க அளவு வளர்ச்சியுற்றிருக்கின்றது. ஈழத்தில் நாடகத்துறையில் ஒரு புதிய திருப்பம் ஏற்பட்டிருக்கின்றது. இலங்கைக் கலைக் கழக நாடகக் குழுவினர், வெள்ளவத்தை ஹவ்லொக் பாடசாலை மண்டபத்தில் நவம்பர் 5, 6, 7 திகதிகளில் நடாத்திய நாடக விழா அதன் பிரதிபலிப்பேயாகும் மூன்று தினங்களிலும் ஐந்து நாடகங்கள் அரங்கேற்றப்பட்டன.

"ஆச்சிக்குச் சொல்லாதே" என்ற சமூக சீர்திருத்த நாடகத்தை ராஜ் நகைச்சுவைநாடக மன்றத்தினர் முதல்நாள் நிகழ்ச்சியின் போது திறம்பட நடித்தார்கள். கொழும்பில் பலமுறை நடிக்கப் பெற்ற நாடகமாக இருந்தும் பார்வையாளர்களின் பாராட்டைப் பெறத்தவறவில்லை. சினிமா நட்சத்திரங்கள்போல் நடக்கவேண்டும் என்ற ஆசையால் உந்தப்பட சில பாத்திரங்கள், தங்கள் முன்னேடித் தனத்தைக்காட்டுவதில் பெரும் பிரயத்தனம் செய்தனர்.

வசந்தகானசபா அளித்த மயானகாண்டம் ரசிகர்களின், தனி மதிப்பையும், பாராட்டையும் பெற்றது. இக்கால நவநாகரீக ரசிகர்களும் ரசிக்கும் முறையில் அண்ணுவி மரபு நாடகத்தைத்திறம்பட நடித்தபெருமை இந்நாடகக் குழுவினர்க்கே உரியது. இயக்குநரின் கைதேர்ந்த அனுபவத்தையும் காணமுடிந்தது. கலைரசிகர்களை ஓயாத சிரிப்புக்கும் கைதட்டுக்கும் ஆளாக்கிய நடிப்புத்திறன் நடிகர்களுக்குப் பெரும்புகழை ஈட்டிக் கொடுத்தது. மேடையில் அமைந்த மயானகாண்ட காட்சி எல்லோரையும் பரவசப்படுத்தியது. நாடகம் சொற்ப நேரத்தில் முடிந்திருந்தாலும், ரசிகர்கள் மனதில் தனி இடத்தைப் பிடித்திருக்கும் என்பதில் ஐயமில்லை.

யாழ்ப்பாணம் ஒறியன்ற் விளையாட்டுவளர்ச்சி, நுண்கலைச் சங்கம் அளித்த "தேரோட்டிமகன்" பலரின் பாராட்டைப் பெறத்தவறவில்லை. கலையரசின் இயக்குநர் திறன், நாடகத்தில் பிரதிபலிப்பதைக் காணலாம். கதா பாத்திரங்கள் நடிப்புத்திறனைக் காட்டுவதில் அரும்பாடுபட்டிருக்கின்றனர். பெண்பாத்திரங்களைப் பெண்களே ஏற்று நடித்திருந்தால் நாடகப் போக்கில் தனித்திருப்பம் ஏற்பட்டிருக்கும்.

நாட்டுக் கூத்து என்றுல் பிற்போக்கான, பழைய நிகழ்ச்சி என்று கருதித் தட்டிக்கழித்தகாலம் ஒன்று உண்டு. புராதன கிராமிய நாட்டுக் கூத்து முறையை நகர்ப்புறங்களில் பரப்பி பெரும் மதிப்பைத் தேடிக் கொடுத்த பெருமை இலங்கைக் கலைக்கழகத்திற்கே உண்டு.

மட்டக்களப்புக் காரைதீவு நாடகக் குழுவினர் அளித்த "வள்ளி திருமணம்" வடமோடிக் கூத்து வெகுசிறப்பாக அரங்கேற்றப்பட்டது. தாளமும், தாளத்திற்கு ஏற்ற ஆட்டமும் கூத்தைச் சிறப்

பித்தன. திணைப்புனவேடனுக நடித்த சிவலிங்கம் தாளத்திற்கு ஏற்ற முறையில் நடித்தது பாராட்டுக்குரியது. வள்ளியாக நடித்த சி. இராசையாவின் குரல் அந்தப் பாத்திரத்தின் சிறப்பைக்குறைத்து விட்டது. சில நிகழ்ச்சிகள் சோபிக்கவில்லை.

கொழும்பு அமெச்சூர் நாடகக் குழு அளித்த "ஊருக்குபதேசம்" என்னும் சமூக நாடகம் இறுதியாக அரங்கேற்றப்பட்டது. அன்ருட வாழ்க்கையின் சம்பவங்களை அடிப்படையாகக் கொண்ட நாடகத்தில் சில சீர்திருத்தக் கருத்துக்கள் விதைக்கப்பட்டிருந்தன. அறிவு வளர்ச்சியுற்ற இக்காலத்திலும் திருமணத்திற்குச் சீதனம் தான் முதல் அம்சமாக விளங்கும் சீர்கேட்டைச் சித்தரித்துக் காட்டியுள்ளார்கள். யாழ்ப்பாணத்துமுறையில் அமையப்பெற்ற ஏழைக்குடும்பத்தின், கிடுகுக்குடிசையும், கிடுகு வேலியும், எல்லோரையும் பிரமிக்கச்செய்தன. எப்படித்தான் இதை மேடை மீது அமைத்தார்களோ! யாழ்ப்பாணத்து வாழ்க்கை முறையை ஆதாரத்தோடு எடுத்துக் காட்டும் ஒரு அம்சமாக இருந்தது.

இந்நாடக விழாவை கொழும்பில் தமிழ்மக்கள் நெருக்கமாக வதியும் பகுதியில் வைத்திருந்தால், பெரும் தொகையான பார்வையாளர்கள் சமூகம் கொடுக்க ஏதுவாக இருந்திருக்கும்.

மொத்தத்தில், நாடக விழா கலைக் கழகத்தினருக்குப் பெரு வெற்றி என்பதில் ஐயமில்லை. சென்ற ஐந்து ஆண்டுகளாகத் தமிழ் நாடகக் குழுவின் தலைவராக இருந்து பல சாதனைகள் புரிந்த கலாநிதி வித்தியானந்தன் அவர்கட்குத் தமிழ் நாடக ரசிகர்கள் என்றும் கடமைப்பட்டவர்கள்.

—திரு.

# போனது போகட்டும்

மானிப்பாய் முன்னேற்றச் சங்கம்

சென்ற 10-11-62 ஞாயிறு அன்று மானிப்பாய் மெமோறியல் மண்டபத்தில் 'போனது போகட்டும்' நாடகம் நடைபெற்றது.

நிகழ்கால யாழ்ப்பாணக் கதை. இரு கிழவர் - ஒருவர் எளிய வாழ்க்கை நடத்தும் பணக்காரர்; மற்றவர் கடன் பெற்று வாழும் உயர் உத்தியோகஸ்தர். பணக்காரரால் விரோதிகளான இருவரும் சம்பந்திகளாகச் சமரசம் நிலவுகிறது.

'பாங்க'ராக நடித்த ரி. ராஜகோபாலின் நடிப்பு அருமை!

மனைவியின் பாய்ச்சலை வாய்ப்பேச்சால்சமாளிக்கமுடியாத கிழவர் கண்ணுல் வெட்டுகிருர் - வைர வெட்டு! சபாஷ் செல்வரத்தினம்!

குட்டிப்பாகமென்ருலும் தட்டிக் கொள்கிருர் தங்க மெடலைத் தரகர், ஞான பண்டிதன்.

கலைவாணர் - மதுரம் ஜோடிகளைக் கோபாலாக நடித்த அன்னப்பாவும் சொர்ணமாக நடித்த விஜய குலசிங்கமும் நினைப்பூட்டுகிருர்கள்- சிரித்துச் சிரித்து வயிறு புண்ணுகி விட்டதே!

நாடக உலகிற்கே சொந்தமான உயிரற்ற காகிதப் பூங்காவிலே காதல் மொழிபேசுகின்றனர்; என்ருலும் காதலர் பாகத்தில் ஜெகதீசன் – பாலசுப்பிரமணியம் நன்ருக நடித்துள்ளனர். மேக்கப் திறனும், பெண்ணுக்கே உரித்தான முகபாவமும் காதலியாக நடித்த பாலசுப்பிரமணியத்தை அசல் பெண் நடிகையாகக் காட்டுகிறதே!

'புளிச்சல் ஏவறை'யைப் போல. சினிமாப் பாடல்களைச் சேர்த்துள்ளனர்; கண்டிக்கிருேம்! புலமை வற்றிய நாடா நம்நாடு?

போனது போகட்டும்!

—பாமா ராஜகோபால்
—கானு சோமாஸ்கந்தன்

# புலித்தேவன்

திருக்குறள் நாடகமன்றம்,

ஒரு சரித்திர நாடகத்தை மேடைக்குக் கொண்டுவருவது, எவ்வளவு சிரமம். அதில் வெற்றி காண்பதற்கு எப்படியெல்லாம் முயற்சி எடுக்கவேண்டும், என்ற உண்மையை, திருக்குறள் நாடகமன்றத்தாரால் அரங்கேற்றப்பட்ட புலித்தேவன் நாடகத்தைப் பார்த்தோர் புரிந்திருப்பர். இதன் ஆசிரியர் தமிழ்வாணன். அவருடைய இந்த நாடகத்தில் கதை இருக்கிறது. ஆனல் பாத்திர அமைப்பை விளங்கிக்கொள்வது பார்ப்போருக்குக் கஷ்டமாக இருக்கிறது. அது தமிழ்வாணனின் நாடக அறிவைப் பொறுத்தது.

ஈழத்திலும் நல்ல நடிகர்கள் இருக்கிருர்கள், என்பதை எடுத்துக்காட்டும் வகையில் புலித்தேவன் (மு. கணேஷ்), புலி சங்கரன் (குணராசா), ஹெரன் (மரியாம்பிள்ளை) ஆகியோர் சிறப்பாக நடித்துள்ளார்கள். புலித்தேவனின் நடிப்பு, பார்வை ஒருபிரபல நடிகரைச் சிலருக்கு நினைவூட்டினுலும் சற்று நிதானித்து, நுணுகிப்பார்த்தால்' அது அவரின் ஒரு தனித் தன்மைவாய்ந்த நடிப்பு என்பது விளங்கும். பாத்திர சிருஷ்டிக்கேற்ப, அதை நன்கு அறிந்து, உணர்ந்து அதன் முழுமையைத் தன் நடிப்புத்திறனல் வெளிக் கொணர்ந்திருப்பது பாராட்டத்தக்கது. புலி சங்கரன் காதல் காட்சிகளில் வெளுத்து வாங்கிவிட்டார். சிலசமயம் வசனத்தை விரைவாகப்பேசியதினல் தெளிவு இல்லை. அவர் காதலியாக வந்த (மகாலட்சுமி) வடிவின் நடிப்பில் வடிவைக் காணவில்லை. மேடைக்கு ஏற்றவர்தான். நடிப்பில் கவனம் செலுத்தினல் நல்ல எதிர்காலமுண்டு. ஹெரன் பாத்திரம் ஏற்ற மரியாம்பிள்ளை, தோற்றம், பேச்சு, செயல் அத்தனையும் அசல் வெள்ளையனே

தான். அரசி (சந்தானலட்சுமி) வடகரையாளர் (நமசிவாயம்) பாத்திரத்திற்கேற்ப அமைதியாக அதன் பண்புகலையாமல் நடித்திருக்கின்றனர்.

ஹாஸ்ய பாத்திரங்கள் இராசலிங்கம், சரஸ்வதி, சண்முகநாதன் அவ்வளவாகக் கவரவில்லை. என்ருலும் சில இடங்களில் எடுப்பாய் அமைந்தது.

இயக்குநர் புதுமைலோலன். தன் முயற்சியில் வெற்றிதான். என்ருலும் சிலகுறைகளும் இ[...] கத்தான் செய்கின்றன. வள்ளுவ[...] ரைக்காட்ட நினைத்தவர் தாமரைப் பூவில் இருத்திக் காட்டவேண்டிய அவசியமில்லை. இது ஒரு குறையாக இல்லாவிட்டாலும், இதைத் தவிர்த்திருக்கலாம். காட்சிமாற்றத்தில் கூடிய கவனம் செலுத்தியிருக்கவேண்டும்.

மொத்தத்தில்: நல்ல சிறந்த முயற்சி, நிறைந்த திருப்தி.

—நிலா

# மனிதவலை

நீண்டாமை ஒழிப்பா? கலப்புக் காதலா? இதுதான் நாடகக்கதையின் உட்பொருள். இடையில் சமூகப் பிரச்சனைகள் சிலவற்றைச் சேர்த்து இரண்டுமணி நேரம் நாடகத்தை நடத்தியுள்ளார்கள்.

"உடையார் பரம்பரைப் பணக்காரர். அவருக்கு ஏராளமான கமம். கந்தையா தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர். அவரின் குடும்பமே உடையார் வீட்டு ஊதியத்தால் தான் வாழ்ந்துவருகின்றது, கந்தையாவின் இளையமகன் படித்துப் பட்டம் பெற்றவன். உடையாரின் ஆலயத்துள் பிரவேசம் செய்வதற்கு போராட்டம் நடத்துகின்ருன். அதே நேரத்தில் உடையாரின் மகளுடன் காதல் போராட்டம். காதல் போராட்டத்தில் வெற்றியடையும் தருணத்தில் உடையாரின் குறுக்கீடு ஏற்படுகின்றது. உடையாரின் துப்பாக்கிக்கு மகள் பலியாகின்ருள்.

நாடகம் சோபிக்க வேண்டும் என்பதற்காக உயர்சாதி வேளாளர் கீழ்சாதியினரை கேவலமானமுறையில் நடத்தினுர்கள், என்பது கிறஸன்ட் ஆர்ட் புரடக்ஷன்ஸ் போன்ற தேவையற்ற வர்ணனைக் காட்சிகள் வேண்டியதில்லை. இவற்றைக் கொழும்பு போன்ற பிற இடங்களில் நடிப்பதனுல் யாழ்ப்பாணத்தைப் பற்றிய கீழ்த்தர அபிப்பிராயங்களை ஏற்படுத்த வழி வகுப்பதாகும்.

பொதுவாக எல்லோரினதும் நடிப்பு நன்ருக இருந்தது. உடையாரின் மகளாகவும், தேவனின் காதலியாகவும் நடித்த ஏ. புஷ்பகுமாரியின் நடிப்புத்திறனும், நல்ல முகபாவங்களும், மற்றவர்கள் பேசும்போது, அவர் முகத்தில் ஏற்படும், பிரதிபலிப்பும் நாடகத்தில் அனுபவம் ஏற்பட்டுவருவதை எடுத்துக் காட்டிற்று.


பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில், கிறசன்ட் ஆர்ட் புரொடக்சன்ஸ்ஸார் அரங்கேற்றிய இந் நாடகத்திற்குப் பெருந்தொகையான மக்கள் சமுகம் கொடுத்திருந்தார்கள். அவர்களின் இந்த இரண்டாவது முயற்சி பாராட்டத்தக்கது.

—சம்பத்

# வவனியா நகரில் நடனக் கலைப்பள்ளி

ஈழத்தின் உணவுக் களஞ்சியமாக முன்னேறிச்செல்லும் வன வளம் மிக்க வவனியா மாநகர் கலைவளம் நோக்கியும் விரைந்து செல்வது மகிழ்ச்சிகரமானது.

எழில் மிக்க இப் பட்டினத்து மைதானத்திலே கடந்த ஆவணி மாதத்தில் கலைச்செல்வி ண வத்த கலைப் பெருவிழாவின் சிறப்பினை ஆங்குள்ள மக்கள் இலகுவில் மறந்திருக்க முடியாது.



இவ்விழாவில் சின்னஞ்சிறு குழந்தைகளின் அருமையான கலைநிகழ்ச்சிகள் பலவற்றைக் கண்டுகளித்தோம். அவற்றுள் பாராட்டத்தக்க நட்டுவாங்கம், பக்கப்பாட்டு, துணைவாத்தியப் பொருத்தம் என்பன அமையப் பக்குவமான நடன நிகழ்ச்சிகளைத் தயாரித்தளித்த "வைரவபுளியங்குளம் நடனப்பாடசாலை"யைக் கலைச்செல்வி நேயர்களுக்கு இன்று அறிமுகம் செய்து மகிழ்கின்றோம்.

திருமதி இலட்சுமி கந்தையா அவர்களை இயக்குநராகக் கொண்டு கடந்த இரண்டு ஆண்டுகளாக இந்தப்பாடசாலை இயங்கி வருகின்றது.

திருவாளர் கந்தையா ஓர் அரசாங்க ஊழியரானாலும் கலாரசிகராய்க் கலைவளர்ச்சியில் உழைக்கும் ஆர்வம் கொண்டிருத்தல் நடனப் பாடசாலை வளர்ச்க்கு ஆக்கந் தருவதாயுளது.

வவனியா நகர எல்லையுள் அரசாங்க ஊழியர்களின் தனியார் வீடமைப்புத் திட்டப்பகுதியில் நடனப்பயிற்சி நிலையம் அமைந்திருப்பது அப்பகுதி மக்களின் குழந்தைகள் வசதியாய்ப் போய்வரப் பொருத்தமாயிருக்கின்றது. இப்போது இருபது குழந்தைகள் கிரமமாகக் கலைப்பயிற்சி பெற்று வருகிறார்கள். இக் குழந்தைகள், பல நடனப்போட்டிகளில் பங்குபற்றிப் பரிசில்களும்' பாராட்டுக்களும் பெற்றிருக்கின்றார்கள்.

இந் நடனக் கலைப் பள்ளியில் பயிற்சி பெறும் செல்வி கனகசபாபதியின் கலாசித்திரம் ஒன்றை இங்கு மகிழ்ச்சியுடன் வெளியிடுகின்றோம்.

பிரபல தென்னிந்திய எழுத்தாளர் வல்லிக்கண்ணன் எழுதும்
**"கிராம ஊழியனில் நான்"**
கலைச்செல்வி பொங்கல் மலரில் வெளியாகின்றது.

# சிந்தனைக் கண்ணீர்



...ல் முட்டிய நீரை, மேல ... காணுதபடி கஷ்டப்பட்டுக் ...க்குட்டையால் துடைத்துவிட்டு, ...வரிடமிருந்து அலுவலகத்துச்சாவியைப் பெற்றுக்கொண்டான் கண்ணன்.

அதிகாரி போய்விட்டார்; ஏற்கனவே போய்விட்டவர்களைத் தவிர, எஞ்சியிருந்த குமாஸ்தாக்களும் 'பியோன்' களும் அவரைத் தொடர்ந்து அங்கிருந்து வெளியேறினுர்கள். ஆறடுக்குக் கட்டடத்தின் ஆருவது மாடியில் அமைந்திருந்த அந்த அலுவலகத்தில் இப்போது கண்ணன் மட்டுமே தனித்திருந்தான்.

அடக்கி வைக்கப்பட்ட கண்ணீர் அணையை மீறி, மேசையில் சிறு சிறு துளிகளாக விழுந்தது. அவற்றைத் துடைத்தெறிய மனமில்லாதவனுய், சற்று முன் மேலதிகாரி சொன்ன வார்த்தைகளை மீண்டும் நினைவு படுத்தினுன்.

"இப்போது சில நாட்களாக நானும் கவனித்துக்கொண்டுதான் வருகின்றேன், ஒரு நாளாவது நீ 'லீவ்' எடுத்ததில்லை வேலை அதிகம் என்று சொல்லிக்கொண்டு இரவு ஆறு, ஏழு மணி வரை 'ஓவர்டைம்' செய்கின்ருய்...... வீட்டாருடன் ஏதாவது கோபமோ?"

பதிலை எதிர்பார்க்காது அவர் போய்விட்டார். பதிலை நினைத்துக் கொண்டு கண்ணீர் பெருக்கினுன் கண்ணன்.

❀ ❀ ❀

இரண்டு ஆண்டுகட்கு முன் அரசாங்கத் தேர்வில் தேறி அந்த இலாகாவிற்குச் சென்றவன் கண்ணன். கஷ்டப்பட்டு உழைப்பவர்களின் பணத்தைக் கஷ்டப்பட்டுக் கணக்குப் பண்ணி, அதில் ஒரு பகுதியை கஷ்டப்படாமல் அரசாங்கத்தின் உடைமை ஆக்குவதுதான் அந்தவருமானவரி இலாகாவின் வேலை. நாள் முடிந்தாலும் வேலை முடியாது. அங்கிங்கு திரும்பாமல், அரட்டை அடிக்காமல், அநாவசியமாகப் பொழுதைக் கடத்தாமல் பணி புரிந்தால்தான், வேலையின் ஒரு பகுதியையாவது செய்து முடிக்கலாம்.

வேலை ஏற்ற புதிதில், கணணன் கர்ம சிரத்தையுடன் எல்லா வேலைகளையும் செய்தான். கடமையை ஒழுங்காகச் செய்தால், யாருக்கும் பயப்படத் தேவையில்லை; எவருக்கும் அநாவசியமாகப் பணியத் தேவையில்லை. கண்ணியமான வாழ்க்கை, கை நிறைந்த சம்பள மில்லைத்தான்; என்ருலும் கஷ்டப்படவோ, கடன் வாங்கவோ தேவையில்லை.

நாட்கள் செல்லச் செல்ல, உலகம் அவனுக்குப் 'பிடிபட' த் தொடங்கியது. 'அரசாங்க வேலை' என்பதன் அர்த்தத்தை உணரத் தொடங்கினுன். அதற்குப் பிறகு அவன் அரட்டை அடித்தான்; அங்குமிங்கும் திரிந்து நேரத்தைப் போக்கினுன்; அநாவசியமாக "லீவ்" எடுத்தான்; அப்பா, அம்மாவைப் பார்க்க யாழ்ப்பாணம் போனுன்.

❀ ❀ ❀

நிம்மதி நிறைந்த அந்த நாட்களை நினைத்தபோது அவன் கண்கள் மீண்டும் குளமாயின

அந்தக் கண்ணீரில்பழைய நினைவுகள்மிதந்தன......

அப்பாவிடம் அவனுக்கு பயம் கலந்த பணிவு உண்டு; அம்மாவிடம் அன்பு கலந்த பாசம் உண்டு; பிறந்து வளர்ந்த கிராமத்தின் மீது பெருமை கலந்த பற்று உண்டு. இந்தக் காரணங்களால், ஊருக்குச் சென்று அப்பா, அம்மாவைப் பார்க்க வேண்டும் என்ற ஆசை இடைக்கிடை எழுவதுண்டு

அப்படி ஒரு தடவை ஊருக்குச் சென்று தங்கியிருந்த போதுதான், அவன் கண்டறியாத ஒன்றைக் கண்டான்! அந்த ஒன்று, இரண்டு எழுத்துக்களாய் விரிந்து, அவனுடைய கண்களை இழுத்தது; கருத்தை இழுத்தது; நெஞ்சை இழுத்தது; நினைவை இழுத்தது; இலட்சியத்தை இழுத்தது; எல்லாவற்றையுமே இழுத்துவிட்டது!

இனிமை குலுங்கும் அந்த இரண்டு எழுத்துக்களை, அவை குறிக்கும் அந்த எழில் உருவத்தை, அந்த உருவத்தினுள்ளே இருந்த உயிரின் துடிப்பை அவன் உணர்ந்துகொண்டபோது, அவனுடைய இதயத்தின் இன்ப ஒலி வாய் வழியே வெளியே வந்து இன்ப நாதமிசைத்தது — ராதா!

யாழ்ப்பாணம் செல்ல வேண்டும் என இடைக்கிடை எழுந்த ஆசை இப்போது அடிக்கடி எழுந்தது.

சென்றான்; பெற்றாரைப் பார்த்தான்; பிறந்த ஊரைச்சுற்றிப் பார்த்தான்; பிறரெவரும் அறியாதவாறு தன் நினைவுடன் பிணைந்துவிட்ட ராதையையும் பார்த்தான்.

நெஞ்சும் நினைவும் ஒன்றாக, நிழல்கள் நீளும் நேரம் வரை எத்தனை கதைகளை அந்த இருவரும் பேசியிருக்கின்றார்கள்!

❀ ❀ ❀

இந்த இன்ப நினைவில் சற்று நேரம் கண்கள் உலர்ந்தன; கண்ணீர் நின்றது.

காட்சி மறைய, பெருமூச் சொன்று புறப்பட்டது.

சென்று மறைந்த காலத்திலிருந்து நின்று நிலைக்கும் காலத்திற்கு வந்தான்.

மேலதிகாரியின் கேள்வி மீண்டும் விஸ்வரூபம் எடுத்தது. கண்கள் பனிக்க, அவன் சிந்தனை விரிந்தது.

❀ ❀ ❀

வழக்கம் போல் யாழ்ப்பாணத்திற்குச் சென்றான் ஆறு மாதங்களுக்கு முன்பு. வழக்கம் போல் வாய் நிறைய வரவேற்றாள் அன்னை. வழக்கம் போல் அன்னையின் உபசரிப்பில் தன்னை மறந்து இருந்துவிட்டுச் சிறிது நேரத்தின் பின் வெளியே செல்வதற்கு வாசல் கதவைத் திறந்தான். வழக்கம் போல் இரண்டு பார்ஸல்கள் கையிலிருந்தன.

''வந்ததும் வராததுமாக எங்கேயடா போகின்றாய்?'' — வழக்கமற்ற குரல் இது. அவனை எந்தச் சந்தர்ப்பத்திலும் ஏசியறியாத தந்தையின் இடிமுழக்கம்!

அதிர்ந்துபோய் அப்படியே நின்றுவிட்டான் அவன். அலறியடித்துக் கொண்டு அங்கே வந்தாள் அன்னை.

பாயத் தயாராகும் புலியின் உமலுடன் கணவன் நிற்பதையும்,

பயந்து நடுங்கும் ஆட்டின் பதற்றத்துடன் மகன் நிற்பதையும் கண்ட அவளுக்கு, வார்த்தைகள் வெளியே வர வெகு நேரம் எடுத்தன.

''கொழும்பிலிருந்து அவன் இப்பதான் வந்திருக்கிறுன். அதுக்கிடேலே உங்களுக்கு என்ன வந்தீட்டுது?'' – உளறி விடுவேனே என்று பயந்தவள் உறுதியோடு கேட்டாள்.

''தங்கம்...!'' கோபம் கொப்புளிக்கும் கணவனின் தொனி அவளை வாய் மூடி மௌனியாக்கியது.

மெல்ல மெல்லச் சென்று கண்ணனின் தோள்களை வருடினுள்.

நடராசரின் குரல் மீண்டும் உரத்து ஒலித்தது.

''கண்ணு, இன்றைக்குச் சொல்லிவிட்டேன், நீ எங்கே போகிருயென்பது எனக்குத் தெரியும். வெட்கம் ரோசம் இல்லாத அந்த வேலாயுதம்பிள்ளை வீட்டோடு நீ ஒரு தொடர்பும் வைத்துக் கொள்ளக் கூடாது. இதைமீறி நீ அங்கே போவதானல், நிரந்தரமாக அங்கேயே தங்கிவிடு. எனக்கிருந்த ஒரே மகனும் செத்துவிட்டான் என்று நினைத்துக் கொண்டு கீரிமலேக்குப் போய் ஒரு முழுக்குப் போட்டு வந்துவிடுவன்.''

''அப்பா...!''

''என்ன இண்டைக்கு இப்பிடிப் பேசிறியள்?''

மகனின் அபயக் குரலேயோ மனைவியின் அழுகைக் குரலேயோ கேளாதவர் போல் அப்பால் சென்று விட்டார் நடராசர்.

அருமைத் தாய் ஆசை மகனைப் பார்த்தாள். ஆசை மகன் அருமைத் தாயைப் பார்த்தான். பொங்கி வரும் கண்ணீர் மடையைத் தடுப்பதற்காகக் கண்களை வெட்டி முழித்தனர். அவர்களுடைய முயற்சிகளை முறியடித்துக் கொண்டு கண்ணீர் வந்தே விட்டது.

''என்ன தம்பி, இது? வேலாயுதம்பிள்ளை வீட்டில் உனக்கு என்ன தம்பி வேலே?'' பரிவுடன் கேட்டாள் பெற்றவள்,

கண்ணன் பதில் சொல்லவில்லே. அவனல் வாயே திறக்க முடியவில்லே. அங்கே நிற்கப் பிடிக்காதவனய் எழுந்து சென்றுன் உள்ளே

ஒரே திகைப்பாக இருந்தது தாய்க்கு. கணவனின் கோபம் அவளுக்குப் புரியவில்லே; மகனின் போக்கு' அவளுக்குப் பிடிபடவில்லே. எதை நினைப்பது? எதை விடுவது? என்று தெரியாமல் தவித்துக் கொண்டு நின்றுள் அங்கே.

நேரம் போய்க்கொண்டிருந்தது.

பித்துப் பிடித்தவளைப் போல் நின்றிருந்த அவளை, பிள்ளையின் பாசக் குரல் இவ்வுலகிற்குக் கொண்டு வந்தது.

''அம்மா! நான் போய் வருகிகிறேன்.''

''அப்பாவின் முரட்டுக் கோபம் உனக்குத் தெரியாதா? நீயும் ஏனடா இப்பிடிப் பிடிவாதம் பிடிக்கிருய்?''

''அவர்களுடைய வீட்டிற்கு நான் போகேல்லே அம்மா, கொழும்பிற்கே திரும்பிப் போகின்றேன்.''

''கொழும்புக்கா...?''

உடலிலே சோர்வு, முகத்திலே

சோகம், கண்களில் கண்ணீர், கைகளில் சூட்கேஸ், கால்களில் சப்பாத்து—இந்தக் கோலத்தில் நின்ற மகனை அப்பொழுதுதான் நன்கு கவனித்த அன்னை அலறினாள்; பதறினாள்.

"கொழும்பிற்குத்தான். இப்ப போனால் மத்தியான "உத்தரதேவி" யிலேயே போய் விடலாம்." தன் தீர்மானத்தை மாற்றமுடியாத தொனியில் கூறினான் கண்ணன்.

கொண்டவனின் பிடிவாதத்திற்குப் பெற்றவனின் பிடிவாதம் சற்றும் சளைத்ததல்ல என்பதை அனுபவத்தில் உணர்ந்த அவள் கடைசிமுயற்சியாக உள்ளே குரல் கொடுத்தாள்.

"இஞ்சேருங்கோ,...தம்பி கொழும்புக்குப் போகுதாம்."

"கழுதை எங்கேயாவது போகட்டும் விடு!"—நான்கு சொற்கள் நறுக்குத் தெறித்தாற் போல வந்து விழுந்தன.

அவற்றின் எதிரொலியை எதிர்பார்த்து அவள் வெளியே திரும்பிய பொழுது—

'கழுதை' அங்கே இல்லை; அது எங்கோ சென்றுவிட்டது; விரைந்து சென்றுவிட்டது; வெகு தூரம் சென்றுவிட்டது!

கண்ணன் கொழும்பிற்கு வந்துவிட்டான்.

தகப்பன் குறிப்பிட்ட வேலாயுதம்



பிள்ளையின் மகள்தான்
வும் கண்ணனும் எ
எந்த நேரத்தில்

என்பது இரண்டே இரண்டு பேர்களுக்கு மட்டும்தான் தெரியும். அந்த இரண்டு பேர்கள்—ராதாவும் கண்ணனும்!

இப்படி மிகவும் முன்னெச்சரிக்கையுடன், அவன் நடந்து கொண்ட போது அவனுடைய தந்தை எப்படி அதை அறிந்தார்? இனி என்ன செய்வது?

விடுவிக்க முடியாத புதிராக, தீர்க்க முடியாத பிரச்சனையாக இது அவனுள்ளத்தைக் குடைந்தது.

எதையுமே செய்ய முடியாத நிலையில், இரண்டொரு நாட்கள் அவன் குமுறிக் குமுறி அழுதான்.

எல்லாவற்றையுமே இழந்துவிட்டதைப் போன்ற ஒரு ஏக்கம்; இனி, எப்படி வாழ்ந்தால்தான் என்ன, என்ற விரக்தி!

தன் சூழலை, உறவினரை, உற்ற நண்பர்களை உயிருக்குயிரான ராதையை, ஏன் தன்னையே மறக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுவிட்டதாக அவன் நினைத்தான்.

உலகத்தைவிட்டு ஒளித்தோட முடியுமா?

அலுவலகத்துள் தன்னை மறைத்
…ன்; அங்கிருந்த வேலைகளில்
…னை மறந்தான். ஞாயிறு தவிர்ந்த
…றய நாட்களில் காலை ஏழு
… தொடக்கம், இரவு எட்டு
…வரை வேலை செய்தான். பகி
…முறை நாட்களைக்கூடச்
…வைக்கவில்லை.

… மூட்டை கட்டி வைத்
…ளவு நிம்மதியுடன்
… அவனை, அதிகாரியின் அனுதாப விசாரணை அடியோடு கலக்கிவிட்டது.

தனியாக இருந்து வேலை செய்வதற்கு அன்று அவனால் முடியவில்லை. அந்த அறைக்குள்ளேயே சிறிது நேரம் உலாவினான்.

பிரியாவிடை பெற்ற நிம்மதியைப் பிடித்திழுத்துக் கொணரும் சக்தி அவனிடம் இல்லை.

மேலே வீணாகச் சுழன்ற மின் விசிறியை நிறுத்தினான். ஜன்னல்களைச் சாத்தி, 'லைட்'டுகளை அணைத்து, அலுவலக கதவுகளைப் பூட்டிவிட்டு வெளியேறினான்.

கொழும்பு நகரம் மினு மினுத்தது. நிலவு இரவைப் பகலாக்கி மின்காந்த விளக்குகளைப் பயனற்றதாக்கியது.

அவனுடைய வரவையே எதிர்பார்த்து நின்றதைப் போல், அவன் ஏறியதும் புறப்பட்டுவிட்டது அந்த இரட்டைத் தட்டு பஸ். மேல் தட்டில் ஏறி ஒதுக்கமாக ஒரு மூலையில் உட்கார்ந்து கொண்டான் கண்ணன். தனக்கென ஓரிடத்தைத் தேர்ந்தெடுத்த பின் சுற்றுமுற்றும் பார்த்தான். அவனைத் தவிர அங்கு வேறெவருமில்லை.

பஸ் ஓடியது. காற்று இதமாக வீசியது. சோர்வுற்றிருந்த தேகம் சுகம் கண்டது.

திடீரென்று 'பிறேக்கை' அழுத்தினான் சாரதி. சாதாரணமாகவே ஒரு குலுக்கு குலுக்கிவிட்டு நிற்கும் பஸ், அன்று கண்ணனைத் தட்டி எழுப்பித் துள்ளி விழவைத்தது. மூக்கு முன் ஸீட்டை முத்தமிட்டது.

அவசர அவசரமாக மேலே ஏறி வந்தார்கள் ஓர் ஆணும் ஒரு பெண்

# பீடிகளில் ஒரு புதுமை!

# அப்துல்லா பீடி



★ உழைத்துக் களைத்துவருபவர்கள்

★ படித்து அலுத்து இருப்பவர்கள்

★ கனதனவான்கள்

★ கட்டிளங்காளைகள்

அனைவரும் ஆவலுடன் பாவிப்பது


# அப்துல்லா பீடியே!

சிறந்த புகையிலையினால் திறமையாகத் தயாரிக்கப்படுவது.

## அப்துல்லா பீடிக் கம்பெனி

முருங்கன்.

Registered at the G. P. O. as a Newspaper




Cover Printed at the Meihandan Press, 161, Sea Street, Colombo.
இப்பத்திரிகை செட்டிகுளம் பாலன் வெளியீட்டு நிலையத்திற்காக சுன்னுகம் கலாதேவி [illegible] வெளியிடப்பட்டது.